தினமணி

# வெங்காய விலை இருமடங்கு குறைந்தது:கிலோ ரூ.25-க்கு விற்பனை

First Published : 27 Jan 2011 03:40:23 AM IST



சென்னை, ஜன. 26: கடந்த ஒரு மாதமாக உச்சத்தில் இருந்துவந்த வெங்காயத்தின் விலை கிலோ ரூ.25 ஆக குறைந்துள்ளது.

வெங்காயத்தின் விலை கடந்த ஒரு மாதத்துடன் ஒப்பிடும்போது இரு மடங்கு குறைந்திருந்தாலும், சென்னை கோயம்பேடு காய்கறி மார்க்கெட்டில் புதன்கிழமை காய்கறி விற்பனை மிக மந்தமாக இருந்தது.

இந்தியா முழுவதுமே கடந்த ஒரு மாதமாக வெங்காய விலை உச்சத்துக்குச் சென்றது. இந்த விலை உயர்வு பிரச்னை நாடாளுமன்ற கூட்டத்தொடரிலும் எதிரொலித்தது. இதையடுத்து, பாகிஸ்தானில் இருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்து விலையைக் கட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தது மத்திய அரசு.

இந்த நிலையில் ரூ. 70 முதல் ரூ. 100 வரை விற்பனை செய்யப்பட்டு வந்த வெங்காயத்தின் விலை செவ்வாய்க்கிழமை (ஜனவரி 25) ஒரே நாளில் இருமடங்கு குறைந்து ரூ.25-க்கு விற்பனையானது.

மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் வெங்காய விளைச்சல் அதிகமானதால், இந்த திடீர் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கடந்த வாரத்தில் ரூ.40 வரை வெங்காயம் விற்பனை செய்யப்பட்டது. இப்போது ரூ.25 ஆக விலை குறைந்துள்ளது. அதாவது ரூ.15 வரை விலை குறைந்துள்ளது என்றார் கோயம்பேடு காய்கறி மார்க்கெட் ஆலோசகர் வி.ஆர். சௌந்திரராஜன்.

இதில் 2 மாதத்துக்கு முன்பு ரூ. 130-க்கு விற்பனையான பச்சை பட்டாணியின் விலை இப்போது ரூ. 30 ஆக குறைந்துள்ளது. உத்தரப்பிரதேசம், மத்திய பிரதேச மாநிலங்களில் இருந்து ரயில் மூலம் கொண்டு வரப்பட்டு பச்சை பட்டாணி விற்பனை செய்யப்படுகிறது. இப்போது அறுவடை சீசன் என்பதால் விலை குறைந்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

**குறையவில்லை முருங்கைக்காய் விலை:** முருங்கைகாய் ஒரு கிலோ ரூ.130 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. குஜராத்தில் இருந்து கொண்டு வரப்பட்டு விற்கப்படுவதால், விலை இன்னும் குறையவில்லை.

தமிழகத்தில் பருவ மழை பெய்ததால், பூக்கள் கொட்டிவிட்டன. எனவே இப்போதுதான் முருங்கை மரங்களில் பூ பூத்துள்ளது. எனவே தாராபுரம், ஒட்டன்சத்திரம், வத்தலக்குண்டு, பெரம்பலூர் மாவட்டங்களில் இருந்து முருங்கைக்காய் வரத்து எதிர்பார்க்கப்படுகிறது. வரும் பிப்ரவரி மாதத்தில் விலை குறைய வாய்ப்புள்ளது என்றார் அவர்.

**மந்தமான காய்கறி விற்பனை:** எப்போதும் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழியும் கோயம்பேடு காய்கறி மார்க்கெட், குடியரசு தினமான புதன்கிழமையன்று காற்று வாங்கியது. வெங்காயத்தின் விலை ஒரே நாளில் இரு மடங்காக வீழ்ச்சியடைந்தாலும், விடுமுறை தினம் என்பதால் யாரும் மார்க்கெட் பக்கம் வரவில்லை. வழக்கத்திற்கு மாறாக விற்பனை மட்டுமல்லாமல், பொதுமக்களின் கூட்டமும் மந்தமாகவே இருந்தது.

**காய்கறிகளின் விலை பட்டியல் (ஒரு கிலோவுக்கு):**

கோஸ் - ரூ. 10.

காரட் - ரூ. 18.

பீன்ஸ் - ரூ. 20.

தக்காளி - ரூ. 25.

காலிபிளவர் - ரூ. 15.

பச்சை பட்டாணி - ரூ. 30.

பச்சை மொச்சை - ரூ. 25.

முள்ளங்கி - ரூ. 10.

சௌசௌ - ரூ. 8.

உருளைக்கிழங்கு - ரூ. 15.

அவரைக்காய் - ரூ. 12.

கத்தரிக்காய் - ரூ. 15.

வெண்டைக்காய் - ரூ. 35.

பாகற்காய் - ரூ. 18.

புடலங்காய் - ரூ. 13.

முருங்கைகாய் - ரூ. 130.

வெங்காயம் - ரூ.20 முதல்
ரூ.25 வரை.

சேனைக்கிழங்கு - ரூ. 11.

சேப்பங்கிழங்கு - ரூ. 13.

இஞ்சி - ரூ. 40.


பச்சை மிளகாய் - ரூ. 15.

கோவக்காய் - ரூ. 15.

காராமணி - ரூ. 15.

**வாங்க முடியாத உயரத்தில் மல்லிகை!**

First Published : 27 Jan 2011 03:15:12 AM IST



சென்னை/மதுரை/வேலூர், ஜன. 26: சாமானிய வீட்டுப் பெண்கள் வாங்க முடியாத அளவுக்கு மல்லிகைப் பூ விலை மதுரைப் பகுதியில் அதிகரித்துள்ளது. எண்ணிக்கை அடிப்படையில் நூறு பூக்கள் ரூ.35 முதல் ரூ.40 வரை விற்கப்படுகிறது.

தமிழகத்தில் ஒவ்வோர் ஊருக்கும் ஒரு பொருள் சிறப்பாகக் கூறப்படும். அந்த வகையில் மல்லிகைப் பூவுக்கு மதுரை புகழ் பெற்றதாகக் கருதப்படுகிறது. காரியாபட்டி, பெருங்குடி, திருமங்கலம், பாராபத்தி, அரசமரத்துப்பட்டி, மேலக்கால், உசிலம்பட்டி என மதுரையைச் சுற்றிலும் மல்லிகை விளைச்சல் அதிகம் உள்ளது.

மதுரை மல்லிகை அதிக மணத்துடனும், அளவில் பெரியதாகவும் இருக்கும் என்பதால் அதற்கு பெண்களிடையே அதிக வரவேற்பு இருக்கிறது. ஆண்டுதோறும் மார்ச் முதல் ஜூன் வரை மல்லிகைப் பூ விளைச்சல் இருப்பதால், அப்போது வரத்து அதிகமாக இருக்கும். மற்ற மாதங்களில் வரத்து குறைவாக இருக்கும்.

மல்லிகை விளைச்சல் உள்ள மாதங்களில், மதுரை மலர் வணிக வளாகத்துக்கு தினமும் சுமார் 5 டன் மல்லிகை வரத்து இருக்கும். மற்ற மாதங்களில் சுமார் 100 கிலோ வரத்து இருக்கும். மதுரையிலிருந்து சென்னை, கொடைக்கானல், திருப்பூர், சேலம், கோவை என பல்வேறு நகரங்களுக்கு மட்டுமல்லாது கேரளம், ஆந்திரம் என வெளிமாநிலங்களுக்கும் மல்லிகைப் பூக்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

கடந்த நான்கு ஆண்டுகளாகவே மல்லிகை உள்ளிட்ட பூக்களின் விலை திடீரென அதிகரித்துவிட்டதாகக் கூறுகிறார் இத்தொழிலில் 40 ஆண்டுகளாக ஈடுபட்டுவரும் முருகன்.

4 ஆண்டுகளுக்கு முன் விளைச்சல் மாதங்களில் கிலோ ரூ.50 என விற்கப்பட்ட மல்லிகைப் பூ, இப்போது குறைந்தது கிலோ ரூ.1000-க்கு விற்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தத் திடீர் விலை உயர்வுக்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. அதாவது, விளைச்சல் இல்லாத மாதங்களாகக் கருதப்படும் ஜூலை முதல் பிப்ரவரி வரை விலை அதிகமாக இருக்கும் எனக் கூறப்படுகிறது.

மேலும், விளைச்சல் இல்லாத மாதங்களில் அரிதாக ஒட்டு ரகம் மூலம் கிடைக்கும் பூக்களை சந்தைக்குக் கொண்டு வந்து அதிக விலைக்கு விற்பதாகக் கூறப்படுகிறது.

மேலும், தேவை அதிகரித்த நிலையில், மல்லிகைப் பூ சாகுபடி குறைந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. மதுரை மாவட்டத்தில் பல ஆண்டுகளாக சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் மல்லிகை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஆனால், இப்போது சுமார் 5 ஆயிரம் ஏக்கர் அளவுக்கே சாகுபடி செய்யப்படும் நிலை உள்ளது.

இத்தகைய நிலையாலும் பூ "வரத்து குறைந்து' விலை அதிகரித்துவிட்டதாகக் கூறுகிறார் மதுரை புறநகரைச் சேர்ந்த விவசாயி ஒருவர். மல்லிகை விளைச்சல் அதிகரிக்கவேண்டும் எனில் பகலில் மிதமான வெப்பமும், இரவில் மிதமான குளிர் சூழலும் இருக்கவேண்டியது அவசியம் எனக் கூறும் விவசாயிகள், நடப்பாண்டில் இரவில் குளிர் அதிகமாகவும், குறிப்பாக அதிகாலையில் பனிப் பொழிவும் இருப்பதால் விளைச்சல் குறைந்துவிட்டதாகக் குறிப்பிடுகின்றனர்.

மல்லிகைப் பூ மட்டுமல்லாது, மதுரையில் அனைத்து வகைப் பூக்களுமே கடந்த ஓராண்டாக விலை அதிகரித்திருப்பதாகவும் பூ விற்பனையாளர்கள் கூறுகின்றனர். திருமண மாலையில் அதிகம் கட்டப்படும் சம்பங்கிப் பூ கிலோ ரூ.50 லிருந்து ரூ.100 ஆகவும், மெட்ராஸ் மல்லி ரூ.100 லிருந்து ரூ.300 ஆகவும், கனகாம்பரம் ரூ.200 லிருந்து ரூ.500 ஆகவும், செவ்வந்திப் பூ ரூ.50 லிருந்து ரூ.100 ஆகவும், அரளிப் பூ ரூ.50 லிருந்து ரூ.100 ஆகவும், ரோஜாப் பூ ரூ. 60 லிருந்து ரூ.100 ஆகவும் விலை அதிகரித்து விற்கப்பட்டு வருகிறது.

**வேலூரில் விலை சரிகிறது**

வேலூரில் பொங்கல் பண்டிகையின்போது கிலோ ரூ.900-க்கு விற்பனை செய்யப்பட்ட மல்லிகை பூவின் விலை சனிக்கிழமை ரூ.350-ஆக குறைந்தது.

மல்லிகை பூவின் பருவம் தொடங்கியதை அடுத்து பூ வரத்து இம்மாத இறுதி முதல் அதிகரிக்கத் தொடங்கும். அதனால் தொடர்ந்து விலை சரிவு ஏற்படும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

செப்டம்பர் மாதத்துக்கு பிறகு மல்லிகை பூ விளைச்சல் குறைந்ததால் விலை அதிகரித்துள்ளது. பொங்கல் பண்டிகையின்போது இதன் விலை மொத்த விற்பனையில் கிலோ ரூ.900-ஐ எட்டியது. அதனால் சில்லறை விற்பனையில் முழம் பூ ரூ.30-க்கு விற்பனை செய்யப்பட்டது.

மல்லிகை பூக்கும் பருவம் பொங்கலை அடுத்து தொடங்கியுள்ளது. அதனால் நாளுக்கு நாள் இதன் வரத்து மெல்ல அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இன்னும் ஒரு மாத காலத்திலேயே வரத்து 3

மடங்காக உயரும். அப்போது இதன் விலை ரூ.120-ஆக குறைய வாய்ப்புள்ளது என்கின்றனர் பூ வியாபாரிகள்.

வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை, பருவகாலத்தில், அரியூர், ஊசூர், ஒடுக்கத்தூர், குடியாத்தம், அணைக்கரை, ஆம்பூர், வாணியம்பாடி உள்ளிட்ட பகுதிகளில் அதிக அளவில் மல்லிகை சாகுபடி நடந்து வருகிறது.

இதனால் மாவட்டத் தேவைக்கு அந்தந்தப் பகுதிகளை சுற்றியுள்ள சுமார் 15 கி.மீட்டர் தொலைவுக்குள் உள்ள கிராமங்களில் இருந்து வரும் மல்லிகைப் பூவே போதுமானதாக இருக்கும்.

பருவகாலத்திலும், மற்ற நேரங்களிலும் சென்னை, பெங்களூர், புதுவை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை உள்ளிட்ட பகுதிகளில் மல்லிகைப் பூவுக்கு அதிக கிராக்கி இருப்பதால் அப்பகுதிகளுக்கு தொடர்ந்து விற்பனைக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

மாவட்டத்தில், ஜூன் தொடக்கத்தில் மல்லிகையின் விலை கிலோ ரூ.15-க்கு விலை சரிவை சந்திப்பது வாடிக்கை என்றனர் மொத்த வியாபாரிகள்.

**காக்கடத்தானுக்கு மவுசு**

மாவட்டத்தில் மல்லிகை பூவின் விலை ஏறும்போதெல்லாம், மல்லிகை பூவை போன்றே காணப்படும் காக்கடாமல்லி எனப்படும் வாசமில்லா பூவை பொதுமக்கள் அதிகம் வாங்கிச் செல்வதுண்டு.

இதனால் வழக்கமாக ரூ.30-க்கு கிடைக்கும் இப்பூவின் விலைகூட இப்போது ரூ.100 விலையை எட்டியுள்ளது.

**சென்னை நிலவரம்**

சென்னை கோயம்பேடு மலர் சந்தைக்கு வழக்கமாக வரும் அளவுக்கு இப்போது மல்லிகைப் பூ வருவதில்லை என்று மொத்த மலர் வியாபாரியான ஹரி தெரிவித்தார்.

வெளியூர்களிலிருந்து கோயம்பேடு மலர் சந்தைக்கு வேன்களில் மல்லிகைப் பூ வருவது வழக்கம். ஆனால், ஒரு வாரமாக மல்லிகைப் பூ ஏற்றி வரும் வேன்கள் அறவே வருவதில்லை. பஸ்களில் மட்டுமே குறைந்த அளவில் மல்லிகைப் பூ வருகிறது.

அதாவது, வழக்கமான அளவில் 25 சதவீதம் மட்டுமே இப்போது சந்தைக்கு மல்லிகைப் பூ வருகிறது. அதுவும் மிகவும் சிறிய பூக்களாக உள்ளன.

தரமான பூக்கள் வராத நிலையிலும், விலை மட்டும் மிகவும் அதிகமாக உள்ளது. திங்கள்கிழமை நிலவரப்படி ஒரு கிலோ மல்லிகை ரூ.1000-க்கு விற்பனை ஆனது. செவ்வாய்க்கிழமை சற்று விலை குறைந்து ரூ.800 முதல் ரூ.900 வரை விற்பனை ஆனது என்றார் ஹரி.

**மானாவாரி விவசாயிகளின் நம்பிக்கை நாயகன் "ஊடுபயிர்'**

First Published : 27 Jan 2011 12:46:18 AM IST



நிலக்கடலை பயிரில் அகல ஊடுபயிராக உள்ள சிறுதானிய வகை பயிர்.

விழுப்புரம்: மானாவாரி விவசாயம் செய்யும் விவசாயிகளின் நம்பிக்கையாக ஊடுபயிர் முறை திகழும் என்று வேளாண் அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.

÷ஆண்டு முழுவதும் நீரின்றி இருக்கும் நிலங்களில், மழைக்காலத்தில் மட்டுமே விவசாயிகள் நிலக்கடலையை (மணிலா) பயிரிடுவார்கள். சில நேரங்களில் அவை மகசூலை தரும், பல நேரங்களில் போதிய நீர்ப் பற்றாக்குறை காரணமாக காய்ந்து சருகாகிப் போவதும் உண்டு. எனவே தான் நிலக்கடலையில் ஊடுபயிராக வரப்பு, கால்வாய் ஓரங்களில் காராமணி, உளுந்து போன்ற தானிய வகைகளை பயிரிடுகிறார்கள்.

÷நிலக்கடலை பொய்த்தாலும் பருப்பு வகைகள் கிடைக்கும் என்பதால், தேசிய வேளாண் ஆய்வாளர்கள் இந்த வகை ஊடுபயிர்களை அகல முறைப்படி செய்தால் நிலக்கடலை பொய்த்தாலும் தானிய வகையால் நஷ்டம் ஏற்படாமல் இருக்கும் என்று பரிந்துரைக்கின்றனர். அந்த வகை ஊடுபயிர்கள் சிறுதானிய வகையாக இருந்தால் முளைப்புத் திறன் உள்ளவரையில் ஈரப்பதம் கிடைத்தால் போதும். அவை மகசூல் தருவதில் தயங்குவதில்லை. இதற்கு தினை, சாமை, வரகு, பனி வரகு போன்ற சிறுதானியப் பயிர்கள் ஏற்றதாகும் என்கின்றனர் வேளாண் அலுவலர்கள்.

÷இயற்கை எருக்கள் குறைந்த மண், குறைந்த நீர்ப் பிடிப்புத் தன்மை ஆகிய காரணங்களால் நிலக்கடலையை தவிர வேறு பயிர்கள் சாகுபடி செய்ய முடிவதில்லை. அந்த மாதிரியான நிலங்களில் ஆண்டு முழுக்க நிலக்கடலைதான் சாகுபடியாகிறது. இந்த விவசாயிகளுக்கு சரியான அளவு மழை கிடைக்கும் காலங்களில் மட்டுமே நிலக்கடலையால் லாபம் பெறமுடியும்.

÷விவசாயிகளின் உணவு உற்பத்தியையும், வருமான பாதுகாப்பையும் மனதில்கொண்டு, வேளாண் அலுவலர்கள், கரை அமைத்தல், நீரோட்ட பாதையில் நீர் சேமிப்பு, நீர் ஆதாரங்களை மேம்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொண்டு ஈரம் பாதுகாப்பு, மண்ணிலுள்ள சத்துக்களை அதிகப்படுத்துதல் என திட்டங்களை செயல்படுத்தி வருகின்றனர்.

÷நிலக்கடலை ஒன்றையே சாகுபடி செய்வதைத் தவிர்த்து மற்ற பயிர்களையும் செய்ய விவசாயிகளுக்கு அறிவுறுத்தி வருகின்றனர். ஆனால் நிலக்கடலை ஒரு பணப்பயிராக இருப்பதால் அதைத் தவிர்த்து மற்ற தானியப் பயிர்களுக்கு மாறுவதை விவசாயிகள் விரும்பவில்லை.

÷இந்த சூழ்நிலையில் தானியப் பயிர்களுக்கு மாற்றுப் பயிராக, ஏழைகளுக்கேற்ற பயிர் என்றழைக்கப்படும் சிறுதானியப் பயிர்களான தினை, சாமை, வரகு, பனி வரகு ஆகியன வறட்சியை தாங்கி வளரக் கூடியவை. இவைகள் முளைப்பதற்கு மட்டுமே ஈரம் தேவைப்படுகிறது. முளைத்து வந்த பிறகு கண்டிப்பாக ஒரு கணிசமான விளைச்சலை இவை தரும். இந்த தானியப் பயிர்களை, நிலக்கடலையின் நடுவே ஊடுபயிராக வரிசையில் பயிரிட விவசாயிகளிடம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த நுட்பமே அகன்ற வரிசை ஊடுபயிர் முறை என்றழைக்கப்பட்டது.

÷இந்த விவசாய முறையை கர்நாடக மாநிலத்தின் வறட்சிப் பகுதிகளில் சோதனை முறையாக அறிமுகப்படுத்தப்பட்டு, தற்போது நாடுமுழுவதும் பரிந்துரைக்கப்பட்டு வருகின்றன. மானாவாரி நிலம் வைத்துள்ளோர் இதை பயன்படுத்தி நஷ்டமில்லாத மானாவாரி மகசூலை பெறுமாறு அதிகாரிகள் கேட்டுகொண்டுள்ளனர்.

**வளம் குறைந்த மண்ணிலும் வளரும் மூங்கில்**

First Published : 27 Jan 2011 12:45:19 AM IST



காஞ்சிபுரம்:÷காஞ்சிபுரம் மாவட்டம் பட்டுக்கு பெயர் போன மாவட்டம். அதுபோல் இங்கு தொழிற்சாலை பெருக்கமும் அதிகரித்து வருகிறது. இதனால் பல்வேறு இடங்களில் தொழிற்சாலை கழிவுகளாலும், சாயப்பட்டறை கழிவுகளாலும் மண்ணின் வளம் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக காஞ்சிபுரம் பகுதிகளில் சாயப்பட்டறை கழிவுகளால் வேகவதி ஆற்றில் விடப்பட்டுள்ள கழிவுகள் அந்த ஆறு செல்லும் பகுதிகளில் உள்ள பல்வேறு

கிராமங்களில் விவசாய நிலங்களை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. அப்பகுதியில் விவசாயம் செய்வதே பெரும் சவாலாக மாறி உள்ளது.

மூங்கில் பயிர் செய்யலாம்: இதுபோல் தொழிற்சாலை கழிவுகள் மற்றும் சாயப்பட்டறை கழிவுகளால் மண்ணின் வளம் பாதிக்கப்பட்ட மண்ணில் மூங்கில் சாகுபடி செய்யலாம். இந்த மூங்கிலைப் பொறுத்தவரை முதல் 5 ஆண்டுக்கு வருமானம் பார்க்க முடியாது.

÷ஐந்து ஆண்டில் ஒரு ஏக்கருக்கு ரூ.1 லட்சம் வரை செலவாகும். பின்னர் ஆண்டுதோறும் ரூ.30 ஆயிரம் முதல் ரூ.40 ஆயிரம் வரை லாபம் பார்க்கலாம். தேவையான உரங்களை வைத்தால் தொடர்ந்து 100 ஆண்டுகள் வரை தொடர்ந்து வளர்ந்து மூங்கில் பயன் கொடுக்கும்.

÷முள் உள்ள மூங்கில் பயிர் செய்யும்போது அறுவடையில் சில சிரமங்கள் இருக்கும். கூடுதல் செலவாகும். விவசாயிகள் மூங்கில் முள் இல்லா மூங்கில் பயிர் செய்வது சிறந்தது என்று விவசாயத்துறை வல்லநுர்கள் தெரிவிக்கின்றனர்.

÷மூங்கிலைப் பொறுத்தவரை காகிதக் கூழ், கைவினைப் பொருள்கள், மருந்து பொருள்கள், மரச்சாமான்கள் தயாரிக்க பயன்படுகிறது. மரச்சாமான்கள் என்று பல்வேறு இடங்களில் பயன்படுவதால் விலையில் பெரும் சரிவு ஏற்படாது என்றும் விவசாய பொருளாதார வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். காஞ்சிபுரம் மாவட்டத்தில் சாயப்பட்டறை கழிவுகளால் விவசாயிகள் பெரும் இடர்பாடுகளை சந்தித்து வருகின்றனர். மண் வளம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாயிகள் விவசாயத்துறை அல்லது தோட்டக் கலைத்துறை அதிகாரிகளின் ஆலோசனைகளை பெற்று மூங்கிலை பயிர் செய்யலாம். ÷மூங்கில் சாகுபடி குறித்து தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் ஸ்ரீவத்சவாவிடம் கேட்டபோது, ""காஞ்சிபுரம் மாவட்டத்தில் அச்சிறுபாக்கம், வாலாஜாபாத், படப்பை, சித்தாமூர், பவுஞ்சூர் உள்பட பல்வேறு இடங்களில் மூங்கில் பயிர் செய்யப்படுகிறது. தொழிற்சாலைகள் கழிவுகள் உள்ள இடங்களிலும் விவசாயிகள் இந்த மூங்கிலை பயிர் செய்யலாம், நன்றாக வளரும்'' என்றார் அவர்.

**"ராஜராஜன் 1000' நெல் சாகுபடி முறைக்கு அரசு உதவி**

First Published : 27 Jan 2011 12:44:15 AM IST



(விருத்தாசலம்) நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ் விழுப்புரம் மாவட்டம் தச்சூரில் "ராஜராஜன் 1000' நெல் சாகுபடி முறையை பயன்படுத்தியுள்ள விவசாயிகள்.

விருத்தாசலம்: கோமுகி அணை பாசன விவசாயிகள் ராஜராஜன் 1000 நெல் சாகுபடி முறையில் பயிரிட்டு விவசாயிகள் அதிக லாபம் பெறலாம். மேலும் இம்முறையை ஊக்குவிக்க அரசு பல்வேறு உதவிகளை செய்கிறது.

÷இம்முறை குறித்து விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் அருட்செந்தில் தெரிவித்தது: தமிழகத்திலுள்ள ஆற்றுப்படுகை பாசனப் பகுதிகளை அதிகப்படுத்தும் வகையில் உலக வங்கி உதவியுடன், தமிழ்நாடு அரசு நீர்வள, நிலவளத் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது.

÷இம்முறையின் மூலம் விழுப்புரம், கடலூர் மற்றும் சேலம் மாவட்டப் பகுதிகளில் கோமுகி அணை பாசனப் பகுதிகளில் ராஜராஜன் 1000 நெல் சாகுபடி முறையை விவசாயிகளிடத்தில் ஊக்குவிக்க அரசு பல்வேறு உதவிகளை செய்து வருகிறது. அதன்படி விவசாயிகளுக்கு களைக்கருவி, நடவு அடையாளக் கருவி, உரங்கள் உள்ளிட்ட பொருள்கள் இலவசமாக வழங்கப்படுகிறது.

÷ராஜராஜன் 1000 நெல் சாகுபடி முறையில் 1 ஏக்கருக்கு நாற்றங்கால் 40 ச.மீ. அளவும், 3 கிலோ விதையும் போதுமானது. ஆனால் நடைமுறை சாகுபடிக்கு நாற்றங்காலில் அளவு 320 ச.மீ. தேவைப்படுகிறது. மேலும் விதை சுமார் 16 முதல் 24 கிலோ வரை தேவைப்படும். ராஜராஜன் 1000 முறையில் நாற்று வயது 14 முதல் 15 நாள்களாகும். எனவே விவசாயிகள் இம்முறையைப் பயன்படுத்தி குறைந்த செலவில் அதிக லாபம் பெறலாம்.

நடைமுறைப்படுத்த வேண்டிய நாற்றங்கால் முறை: 1 ஏக்கருக்கு மேற்கண்டபடி விதையும், அளவும் போதுமானது. நடவு வயலின் ஓரத்தில் 1-க்கு 5 மீ. அளவுள்ள 8 மேடைகளை அருகிலிருக்கும் மண்ணை எடுத்து உருவாக்க வேண்டும். இதில் மக்கிய தொழு உரத்தை தெளிக்கலாம். நிலப்பரப்புக்கு மேல் 5 செ.மீ. உயரம் மேடை அமைத்த பின் மேடைமேல் பாலித்தின் அல்லது பிரித்த உரச் சாக்குகளையோ பரப்ப வேண்டும். மீண்டும் 4 செ.மீ. உயரத்துக்கு மண்ணை நிரப்ப வேண்டும்.

÷விதைநேர்த்தி செய்ய 1 கிலோ விதைக்கு சூடோமோனாஸ் 10 கிராம் மற்றும் அசோபாஸ் உயிர் உரம் 3 கிலோ விதைக்கு 1 பாக்கெட் என்ற அளவில் பயன்படுத்த வேண்டும். சூடோமோனாஸ் மற்றும் அசோபாஸ் ஆகியவற்றை தேவையான அளவு அரிசிக்கஞ்சி அல்லது தண்ணீரில் கரைத்து பின் அவற்றை விதைகளுடன் நன்றாக கலந்து நிழலில் உலர்த்த வேண்டும். உலர்த்திய விதைகளை தண்ணீரில் 24 மணி நேரம் ஊறவைத்து வடிகட்டி பின் முளைகட்ட வேண்டும்.

÷முளைகட்டிய பின் ஒவ்வொரு 5 ச.மீ. மேடையிலும் 375 கிராம் விதையை பரவலாக விதைக்க வேண்டும். பின்னர் பூவாளி கொண்டு தண்ணீர் தெளிக்கலாம் அல்லது சுற்றியிருக்கும் பள்ளங்களில் தண்ணீர் நிரப்பலாம். இதைத் தொடர்ந்து முளைத்த நாற்றுகளை மேடை

மண்ணோடு பெயர்த்து வயலுக்கு எடுத்துச் செல்வது சிறப்பானதாகும். இதனால் நாற்றுகளின் வேர்ச் சூழ்நிலை மாறாமல் நடப்பட வாய்ப்பிருப்பதால், செடிகள் பச்சை பிடிப்பது உடனடியாகத் தொடங்கும். நாற்றுகளை மண்ணோடு பத்தையாக எடுத்து முறம் அல்லது அட்டைப் பெட்டியில் வைத்து, நடவு இடத்தில் நடும்போது நாற்றுகளை பிரித்து நடலாம்.

÷இம்முறையில் 25-க்கு 25 செ.மீ. இடைவெளியில் சதுர நடவு செய்ய வேண்டும். இதில் அடையாளமிட்ட கயிறையோ அல்லது நடவு அடையாளக் கருவியையோ பயன்படுத்தலாம். 1 குத்துக்கு 1 நாற்று என்ற விகிதம் முடிந்த அளவுக்கு வேர்கள் மேல் நேக்காமலும், ஆழமாக இல்லாமலும் நடுவது நல்லது.

÷இம்முறையில் பெரும்பாலும் இயற்கை உரங்கள் மற்றும் உயிர் உரங்களை ரசாயன உரங்களோடு பயன்படுத்துவது மட்டுமல்லாமல், பயிருக்குத் தேவைப்படும் காலகட்டங்களில் அவற்றைப் பிரித்து இடவேண்டும். மேலும் இம்முறையை பயன்படுத்துவதால் ஆள் செலவு குறைகிறது. வயலில் நீரைத் தேக்க வேண்டிய அவசியமில்லை. அதிக தூர்கள் வரும். இதனால் அதிக கதிர்கள் மற்றும் மணிகள் உண்டாகும். இதனால் அதிக லாபம் பெறலாம் என அவர் தெரிவித்தார். மேலும் இதுகுறித்து தகவல்களை கோமுகி நீர்பாசன விவசாயிகள் சங்கங்கள் மூலமாக தொடர்பு கொண்டு பெறலாம் எனவும் அவர் கூறினார்.

**சாயப்பட்டறைக் கழிவு நீரால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ. 6 கோடி இழப்பீடு**

First Published : 26 Jan 2011 10:50:07 AM IST

கரூர், ஜன. 25: திருப்பூர் சாயப்பட்டறைக் கழிவுநீரால் பாதிக்கப்பட்ட கரூர் மாவட்ட விவசாயிகளுக்கு 2 ஆம் கட்ட இழப்பீட்டுத் தொகையாக ரூ. 6 கோடி வரப் பெற்றுள்ளது என்றார் கரூர் கோட்டாட்சியர் ப. அசோக்குமார்.

கரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியரகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் தி. பிச்சையா தலைமை வகித்தார். வேளாண் இணை இயக்குநர் கி. ஜெகதீசன், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் மோ. ஹேமா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட 45 மனுக்களில் 33 மனுக்களுக்கு பதிலளிக்கப்பட்டது. இதில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் அளித்த பதில்களின் விவரம்:

வேலம்பாளையத்தைச் சேர்ந்த வி. பூபதி, திருப்பூர் சாயப்பட்டறை கழிவு நீரால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு அறிவித்த 2 ஆம் கட்ட இழப்பீட்டுத் தொகை எப்போது கிடைக்கும் எனக் கேள்வியெழுப்பியிருந்தார்.

திருப்பூர் சாயப்பட்டறைக் கழிவு நீரால் மாசுபட்ட நொய்யல் ஆற்றுப் பாசன விவசாய நிலங்களின் உரிமதாரர்களுக்கு 2 ஆம் தவணைத் தொகை ரூ. 6 கோடியே 7 லட்சம் கோட்டாட்சியருக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத் தொகையை வழங்க, சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றார் கோட்டாட்சியர்.

நச்சலூர் அருகேயுள்ள பனையூர் வாரியைத் தூர் வார வேண்டுமென்ற தமிழக விவசாயிகள் சங்கச் செயலர் டி.கே. சீனிவாசனின் கேள்விக்கு குளித்தலை ஆற்றுப் பாதுகாப்பு உபகோட்ட உதவி செயற்பொறியாளரின் பதிலில், பனையூர் வாரி 2010-11 ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற நிதியைக் கொண்டு கடைமடையிலிருந்து மேல் நோக்கி 1800 மீட்டர் தொலைவுக்குத் தூர்வாரப்பட்டுள்ளது.

மீதித் தொலைவைத் தூர்வார வாய்க்கால்கள் தூர்வாரும் திட்டத்தின் கீழ் நிதி கேட்டு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. நிதி வந்தவுடன் வாரி தூர்வாரப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

தே. இடையப்பட்டியில் வாரி புறம்போக்கிலுள்ள இடங்களை தனியார் ஆக்கிரமிப்பு செய்ததன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென கடவூர் ஊராட்சிமன்றத் தலைவர் கே. கவிப்பிரியாவும், கவுண்டம்பட்டி - கோப்பு சாலையை அகலப்படுத்தி, தளத்தை உயர்த்தித் தர வேண்டுமென கவுண்டம்பட்டி சுப்பிரமணியனும் கோரிக்கை விடுத்தனர்.

இச்சாலை இப்போது பெய்த மழையாலும், அதிக எடையுள்ள வாகனங்கள் செல்வதாலும் மிகவும் பழுதடைந்துள்ளது. இச் சாலையை மேம்பாடு செய்ய ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 50 லட்சத்திற்கு தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனினும், கூடுதல் நிதி கேட்டு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது என்று பதிலளிக்கப்பட்டது.

மேலும் விவசாயிகள் ஈசநத்தம் ஆர். செல்வராஜ், பிள்ளபாளையம் ஆ. வடிவேல், குளித்தலை எம். ராஜேஸ்வரி, கீழவெளியூர் கே.ஆர். ராஜு, சின்னமநாயக்கன்பட்டி த. பெரியசாமி, நாகனூர் பெ. ஆறுமுகம், குளித்தலை ஏ.வி. கோபாலதேசிகன் ஆகியோர் பல்வேறு கேள்விகளைக் கேட்டிருந்தனர்.

தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில், மேட்டூர் அணையிலிருந்து ஜன.28 ஆம் தேதிக்குப் பின்னர் கரூர், திருச்சி, ஈரோடு, நாமக்கல் மாவட்ட மக்களின் குடிநீருக்காகவும், 17 வாய்க்கால் பாசனத்திற்காகவும் 4 ஆயிரம் கனஅடி நீர் திறந்து விட வேண்டுமென கவுண்டம்பட்டி சுப்பிரமணியன் கோரிக்கை விடுத்தார்.

தினமும் 2100 கன அடி திறக்க வேண்டுமென பொதுப் பணித் துறை மூலமாக பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட வருவாய் அலுவலர் பதிலளித்தார்.

**வியாபாரிகள் குறைந்த விலையில் நெல் வாங்குவதால் விவசாயிகள் கவலை**

First Published : 26 Jan 2011 08:07:12 AM IST

ராஜபாளையம், ஜன. 25: ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகிரி பகுதியில் நெல் அறுவடை சீசன் துவங்கியுள்ளது. விவசாயிகளிடம் வியாபாரிகள் குறைந்த விலைக்கு நெல் வாங்குவதால் பெரும்பாலான விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளனர்.

இப்பகுதியில் முன்பட்டத்தில் நடவு செய்த வயல்களில் தற்போது நெல் அறுவடை நடைபெற்று வருகிறது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், வெளிமாநிலங்களில் இருந்தும் புது நெல் அதிக அளவில் வருவதால் நெல் விலை குறைந்துள்ளது.

சில ஆண்டுகளாக சன்னரகப் பொன்னி அதிக விலைக்கு வாங்கப்பட்டதால் விவசாயிகள் இந்த ஆண்டும் கர்நாடக பொன்னி, ஜெ.ஜெ.எல், ஆந்திர பொன்னி, கோமல், சோனால் ஆகிய ரக நெல்களை பயிர் செய்தனர்.

தற்போது இட்லி அரிசியான திருச்சி-1, அம்மை-16, சி.ஆர். ரக நெல் ஆகியவற்றின் தேவை அதிகரித்துள்ளதால் இந்த ரக நெல் தற்போது சன்னரக நெல் விலையைவிட ரூ.50 அதிகம் விலைக்கு வாங்கப்படுகிறது.

இந்த ரக நெல் 70 கிலோ மூட்டைக்கு கூடுதலாக ரூ.850 வரை வியாபாரிகள் வாங்குகின்றனர். கர்நாடக பொன்னி ரக நெல் 73 கிலோ மூட்டைக்கு ரூ.800 விலை நிலவுகிறது. மற்ற ரகப் பொன்னி நெல், பொடி நெல் மூட்டை ரூ.800க்கும் குறைவாகவே வாங்கப்படுகிறது.

விவசாயிகளிடம் குறைந்த விலைக்கு நெல் வாங்கும் வியாபாரிகள் தற்போது முன்புபோல் பணம் கொடுத்து வாங்குவதில்லை. நெல் எடை போட்ட 10 நாள் கழித்தே பணம் தருகின்றனர். இதனால் பெரும்பாலான விவசாயிகள் நஷ்டம் அடைந்துள்ளதாக தமிழக விவசாயிகள் சங்க விருதுநகர் மாவட்டத் தலைவர் என்.ஏ.ராமச்சந்திர ராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உரம், விவசாய இடுபொருட்கள், உழவுக் கட்டணம், விவசாயத் தொழிலாளர் கூலி உயர்வு போன்றவற்றை ஈடுகட்ட தமிழக அரசு நெல் கொள்முதல் விலையை குவிண்டாலுக்கு ரூ.2000 என அறிவித்தால்தான் விவசாயிகள் ஓரளவு லாபம் ஈட்டமுடியும். தற்போது தமிழக அரசு ஈரப்பதம் 17 சதம் உள்ள சன்ன ரக நெல்லுக்கு ரூ.1100, பிற நெல்லுக்கு ரூ.1050 விலை அறிவித்து கொள்முதல் செய்கிறது. இந்த விலையைவிட தனி வியாபாரிகள் குறைந்த விலைக்குக் கொள்முதல் செய்வது அதிருப்தியடையச் செய்கிறது என்றார்.

**வீட்டிலேயே காய்கறி தோட்டம் அமைக்க பயிற்சி**

First Published : 26 Jan 2011 03:38:25 AM IST

சென்னை, ஜன. 25: சென்னை அண்ணாநகர் 6-வது அவென்யூவில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நகர்ப்புற தோட்டக்கலை வளர்ச்சி மையத்தில் வீட்டுத் தோட்டம் அமைக்க சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இதில், வீட்டின் பின்புறம் உள்ள இடத்தில் காய்கறித் தோட்டம் அமைக்க என்ன செய்ய வேண்டும், அதை பராமரிப்பது எப்படி என்பது குறித்து எளிய முறையில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மாடியில் தோட்டம், வீட்டைச் சுற்றியுள்ள இடத்தில் தோட்டம், வீட்டினுள் அலங்காரச் செடி, உணவுக் காளான் வளர்ப்பு உள்ளிட்ட 23 வகையான பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

பயிற்சியில் சேர விரும்புவோர் 044-26263484, 42170506 என்ற எண்ணை தொடர்பு கொண்டு பதிவு செய்துக் கொள்ளலாம்.

**199 விவசாயிகளுக்கு ரூ. 5.70 லட்சம் நிதி உதவி**

First Published : 26 Jan 2011 08:48:50 AM IST

தேனி, ஜன. 25:தேனி மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட 199 விவசாயிகளுக்கு ரூ. 5.70 லட்சம் நிவாரண நிதி வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் பூ.முத்துவீரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:கடந்த சில மாதங்களுக்கு முன் பெய்த வடகிழக்கு பருவ மழையால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க தமிழக அரசு ரூ. 400 கோடி ஒதுக்கியுள்ளது. இதில் முதல் கட்டமாக விடுவிக்கப்பட்டுள்ள ரூ. 390 கோடியை சம்பந்தப்பட்ட விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கும் பணி தற்போது அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வருகிறது.

தேனி மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழையால் பாதிக்கப்பட்ட 199 விவசாயிகளுக்கு நிவாரணத்தொகை வழங்க ரூ. 5.70 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பாலகோம்பை, டி.சுப்புலாபுரம், குள்ளப்புரம், ஜெயமங்கலம், கீழக்கூடலூர், குச்சனூர், ஆண்டிபட்டி, வடபுதுப்பட்டி, போடி வடக்குமலை காபி மற்றும் ஏல விவசாயிகள் கூட்டுறவு வங்கி, டொம்புச்சேரி, ஜங்கால்பட்டி ஆகிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு ரூ.5 லட்சத்து 62 ஆயிரத்து 515 அனுப்பப்பட்டுள்ளது. நிவாரணத்தொகை பெறத் தகுதியுள்ள விவசாயிகள், இவ் வங்கிகளை அணுகி நிதியைப் பெற்றுக் கொள்ளலாம் என ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் விதை கொள்கலன்கள் விநியோகம்**

First Published : 26 Jan 2011 11:08:51 AM IST

புதுக்கோட்டை, ஜன. 25: புதுக்கோட்டை மாவட்டத்தில் விதை கிராமத் திட்டம் மூலம் விவசாயிகளுக்கு மானிய விலையில் விதை கொள்கலன்கள் வழங்கப்படுகின்றன.

இதுதொடர்பாக மாவட்ட வேளாண் இணை இயக்குநர் தி. தங்கவேலு வெளியிட்ட செய்திக் குறிப்பு:

விவசாயிகளுக்கு விதை கொள்கலன்களை மானிய விலையில் வழங்கும் திட்டத்தை அண்மையில் புதுக்கோட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழக செய்தித் துறை அமைச்சர் பரிதிஇளம்வழுதி தொடக்கிவைத்தார்.

மத்திய அரசு நிதியுதவியுடன் தமிழக அரசால் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

விதைக் கிராமத் திட்டத்தின் மூலம் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு விதை கொள்கலன்களை விநியோகிக்கத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புதுக்கோட்டை மாவட்டத்தில் இதுவரை விவசாயிகள் 174 பேருக்கு விதை கொள்கலன்கள் மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன.

நிகழாண்டில் விதைக் கிராமத் திட்டம் மூலம் புதுக்கோட்டை மாவட்டத்தில் 5 ஆயிரம் விதை கொள்கலன்கள் ரூ. 700 மானியத்தில் அனைத்து வட்டாரங்களிலும் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

எனவே, விவசாயிகள் அந்தந்தப் பகுதி வேளாண்மை விரிவாக்க மையங்களை தொடர்பு கொண்டு மானியத்தில் விதை கொள்கலன்களை வாங்கி விதைகளை சேமித்து வைக்கலாம்.

மேலும், விவரங்களுக்கு வேளாண்மை விரிவாக்க மையங்களையோ, புதுக்கோட்டை வேளாண்மை தகவல் மையத்தை 04322- 232011 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

தினமலர்

ப.வேலூரில் ரூ.20க்கு பெரிய வெங்காயம்விற்பனை: சுற்றுவட்டார மக்கள் மகிழ்ச்சி

பதிவு செய்த நாள் : ஜனவரி 27,2011,01:53 IST

ப.வேலூர்: ப.வேலூர் தினசரி காய்கறி மார்கெட்டில் பெரிய வெங்காயம் ஒரு கிலோ 20 ரூபாய் வீதம் விற்பனை செய்யப்பட்டது. அதையறிந்து மகிழ்ச்சியடைந்த மக்கள், அவற்றை போட்டி போட்டு வாங்கிச் சென்றனர்.சில மாதங்களாக பெரிய வெங்காயத்தின் விலை கடும் ஏற்றம் கண்டு வருகிறது. இது அனைத்து தரப்பு மக்களையும் கடுமையாக பாதிக்கச் செய்துள்ளது. பெரிய வெங்காயம் விலையை கட்டுப்படுத்த, அவற்றுக்கான ஏற்றுமதியை தடை செய்தல் உள்ளிட்ட நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொண்டது.எனினும், அதன் விலை குறைந்தபாடில்லை. உழவர்சந்தைகளில் விற்பனை செய்யப்படும் பெரிய வெங்காயத்தின் விலை, வெளி மார்க்கெட்டுகளுக்கு இணையாக இருந்தது. அந்த விலை தற்போது சற்று குறைந்துள்ளது. அதன்படி ஒரு கிலோ பெரிய வெங்காயம் 40 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

நேற்று ப.வேலூர் தினசரி காய்கறி மார்கெட்டில் ஒரு கிலோ பெரிய வெங்காயம் 20 முதல் 22 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. உழவர்சந்தையில் பெரிய வெங்காயம் விலை 35 முதல் 40 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்ட நிலையில், அதன் விலை, ப.வேலூர் தினசரி காய்கறி மார்கெட்டில் பாதியாக குறைத்து விற்பனை செய்யப்பட்டது மக்கள் மத்தியில் பெரும் ஆச்சர்யத்தை ஏற்படுத்தியது.மேலும், பெரிய வெங்காயத்தை போட்டி போட்டு மக்கள் வாங்கிச் சென்றனர். காய்கறி மார்க்கெட்டில் மொத்த விலையில் மட்டுமே காய்கறி உள்ளிட்டவை விற்பனை செய்யப்படும். இந்நிலையில், பெரிய வெங்காயத்தை வாங்க மக்கள் அதிகளவில் குவிந்ததால், அவை சில்லறை விலையில் விற்பனை செய்யப்பட்டது.இது குறித்து காய்கறி வியாபாரிகள் கூறுகையில், ""பெங்களூருவில் இருந்து பெல்லாரி வெங்காயம் அதிகளவில் வந்தது. அதனால், அவற்றின் விலையை குறைக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. வெங்காய விலை குறைத்து விற்பனை செய்யப்பட்டதால், அவற்றை மக்கள் போட்டி போட்டு வாங்கிச் சென்றனர். உழவர்சந்தையைக் காட்டிலும் இங்கு வெங்காயத்தின் விலை குறைத்து விற்பனை செய்யப்படுகிறது," என்றனர்.

**வாழையில் முடிக்கொத்து நோய் தாக்குதல் அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 27,2011,01:45 IST

நாமக்கல்: "வாழையில் முடிக்கொத்து நோய் தாக்குதலை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்க வேண்டும்' என, நாமக்கல் தோட்டக்கலை துணை இயக்குனர் தனகோபாலன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:முக்கனிகளுள் ஒன்றான வாழை உற்பத்தியில் உலக அளவில் இந்தியா முதல் இடத்தை வகிக்கிறது. தமிழகம் பரப்பளவில் முதலிடமும், உற்பத்தியில் மகாராஷ்டிராவுக்கு அடுத்தப்படியாக இரண்டாவது இடம் வகிக்கிறது.வாழையில் பல்வேறு நோய் மற்றும் பூச்சி தாக்குதல்கள் மகசூல் இழப்பை ஏற்படுத்துகின்றன. முடிக்கொத்து நோய் எனப்படும் வைரஸ் நோயானது கொல்லிமலையில் சாகுபடி செய்யக்கூடிய மலைவாழை, செவ்வாழை, கற்பூரவல்லி வாழையில் ஆண்டு முழுவதும் தாக்குதலை ஏற்படுத்தக் கூடிய நோயாக விளங்குகிறது.அதற்கு மிக முக்கியமாக மலை வாழையானது நீண்ட நாள் பயிராக வளர்க்கப்படுவதும், கொல்லிமலையில் நிலவும் உகந்த காலநிலையுமே காரணமாக அமைகிறது. முடிக்கொத்து நோயானது வாழை நச்சுயிரி-1 அல்லது முடிக்கொத்து நச்சுயிரி என்றழைக்கப்படும் வைரஸால் ஏற்படுத்தப்படுகிறது.

நோயை ஏற்படுத்தக்கூடிய இந்த நச்சுயிரியானது ஒரு வாழையில் இருந்து மற்ற வாழைகளுக்கு "பென்டலோனியா நைக்ரோ நெர்வோசா' எனப்படும் நோய் பரப்பக்கூடிய அசுவினியால் எளிதில் பரப்பப்படுகிறது. நோய் தாக்கப்பட்ட இலையின் அடிப்பகுதியில் இலை நரம்புகளுக்கு இடையே வெளிர் மற்றும் அடர்வான பச்சை நிறகோடுகள் கலந்து காணப்படும்.இலைகள் நீளம் குறைவாகவும் ஓரங்கள் சுருண்டும் காணப்படும். மேலும், அடுத்தடுத்த இலைகளுக்கு இடையே போதுமான இடைவெளி இல்லாமல் இலைகள் கொத்தாக அதாவது கற்றையாகக் காணப்படும். நோய் தாக்கப்பட்ட செடிகள் வளர்ச்சி குன்றி குட்டையாக இருக்கும். அத்தகைய செடிகளில் இருந்து வாழைத்தார் உருவாவதில்லை. அதனால், அதிக மகசூல் இழப்பு ஏற்படுகிறது.

நோய் தாக்குதல் ஏற்பட்ட பின் அதை கட்டுப்படுத்துதல் மிகவும் கடினம். ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையைக் கடைப்பிடிப்பதன் மூலம் இந்நோயைக் கட்டுப்படுத்தலாம். நடவின்போது நோய் தாக்காத மரங்களில் இருந்து பக்கக்கன்றுகளை தேர்வு செய்து நடவு செய்ய வேண்டும்.நோய் தாக்கப்பட்ட செடிகளை உடனுக்குடன் வயலில் இருந்து அப்புறப்படுத்தி அழித்தல் வேண்டும். நோய் பரவாமல் தடுக்க அசுவினியைக் கட்டுப்படுத்தும் பொருட்டு மீதைல் டெமட்டான் 500 மி.லி., ஹெக்டேர் அல்லது டைமீதோயேட் 500 மி.லி., ஹெக்டேர் அல்லது மோனோகுரோட்டாபாஸ் 250 மி.லி., ஹெக்டேர் ஆகிய மருந்துகளில் ஏதேனும் ஒன்றை தெளித்து அதன் மூலம் மகசூல் இழப்பைக் கட்டுப்படுத்தலாம்.நோய் தாக்காத மலைவாழை கன்றுகள்

தேவைப்படுவோர் கொல்லிமலையில் படசோலை மற்றும் செம்மேட்டில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணைகளை அணுகி கன்றுகளைப் பெற்று பயன்பெறலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**குறிஞ்சி துல்லிய பண்ணைசங்க மூன்றாம் ஆண்டு விழா**

பதிவு செய்த நாள் : ஜனவரி 27,2011,01:46 IST

ராசிபுரம்: குறிஞ்சி துல்லிய பண்ணை சங்கத்தின் மூன்றாம் ஆண்டு துவக்க விழா, ராசிபுரம் அடுத்த கதிராநல்லூரில் நடந்தது.சங்கத் தலைவர் பன்னீர் செல்வம் தலைமை வகித்தார். செயின்ட்ரிப் இரிக்கேஷன் நிறுவன வினியோகஸ்தர் லட்சுமிபதி, புதுச்சத்திரம் உதவி வேளாண் அலுவலர் சுப்ரமணி, தோட்டக்கலைத் துறை உதவி வேளாண் அலுவலர் மாரிச்செல்வன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், வேளாண் மற்றும் தோட்டக்கலைத் துறை சார்பில், விவசாயிகளுக்கு செயல்படுத்தப்படும் அரசு நலத்திட்டங்கள் பற்றி சம்மந்தப்பட்ட அலுவலர்களுடன் கலந்து ஆலோசித்து சங்க உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் சிறப்பாக செயல்படுத்துவது என, முடிவு செய்யப்பட்டது.துல்லிய பண்ணை சங்கம் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் சொட்டு நீர் பாசனத்திற்காக சங்க உறுப்பினர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. அந்த கடன் தொகையில் 65 சதவீதம் மானியம் வழங்கப்பட்டுள்ளதை, 100 சதவீதமாக உயர்த்தி வழங்கி, விவசாயிகளின் வாழ்வில் ஒளி ஏற்ற வேண்டும்.துல்லிய பண்ணை சங்கம் மூலமாக வேளாண் முக்கியத்துவம் கொடுத்து விவசாயிகளின் உயர்வுக்கு வழிகாட்டி வரும் அரசுக்கு சங்கம் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**விவசாயிகளுக்கு இடுபொருட்கள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 27,2011,04:01 IST

உளுந்தூர்பேட்டை:பிடாகம் கிராம விவசாயிகளுக்கு தோட்ட கலைத்துறை சார்பில் இடுபொருட்கள் வழங்கப்பட்டது.உளுந்தூர்பேட்டை அடுத்த பிடாகம் கிராம விவசாயிகளுக்கு தேசிய தோட்ட கலை மற்றும் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் அடை யாள அட்டை பெற்றவர்களுக்கு இடு பொருட்கள் வழங்கப்பட்டன. தோட்ட கலைத் துறை உதவி இயக்குனர் நிர்மலா, உதவி வேளாண் அலுவலர்கள் அன்பழகன், முருகன், மதன்ராஜ், உதவி அலுவலர்கள்

அந்தோணிசாமி, ராஜகண்ணு மற்றும் பிடாகம், புகைபட்டி, கிளியூர், நத்தாமூர், தோகைப்பாடி, வீரமங்கலம், பின்னல்வாடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**வடகிழக்கு பருவமழை பாதிப்புவிவசாயிகள் நிதி பெற ஏற்பாடு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 27,2011,03:07 IST

சேலம்: ""வடகிழக்கு பருவமழையால், பாதிக்கப்பட்ட விவசாயிகள், சம்பந்தப்பட்ட பகுதியில் உள்ள கூட்டுறவு சங்கங்களில், நிவாரண தொகை பெற்று கொள்ளலாம்,'' என, கலெக்டர் சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.கடந்த, 2010ம் ஆண்டு, வடகிழக்கு பருவமழையின் போது, கன மழை காரணமாக, தமிழக அரசு பயிர்ச்சேதம் கணக்கிட்டு, 400 கோடி ரூபாய் நிவாரண தொகை ஒதுக்கீடு செய்துள்ளது. இதில், 300 கோடி ரூபாய் நிவாரண தொகை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.இந்த தொகை முழுவதும் மத்திய கூட்டுறவு வங்கியில் இருந்து, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில், சேமிப்பு கணக்கு வைத்து இருக்கும், விவசாயிகள் கணக்கில் வரவு வைக்கும் பணி சென்னை, கிருஷ்ணகிரி மற்றும் நீலகிரி மாவட்டங்களை தவிர, அனைத்து மாவட்டங்களில் நடந்து வருகிறது.சேலம் மாவட்டத்தில், வடகிழக்கு பருவ மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் நிவாரணத் தொகை பெற்றுக் கொள்ளலாம்.

**இயற்கை வேளாண்பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 27,2011,01:17 IST

முசிறி: முசிறி வேளாண் வட்டார அலுவலகம், அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் ஆகியனை இணைந்து விவசாயிகளுக்கு இயற்கை வேளாண், தொழில்நுட்ப குறித்த ஒருநாள் பயிற்சி முகாம் நடத்தினர்.முகாமிற்கு வேளாண் அலுவலர் ராஜா வரவேற்றார். துணை வேளாண் அலுவலர் கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தார். முசிறி வேளாண் உதவி இயக்குனர் ராஜாமணி தலைமை வகித்தார்.

அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மண்ணியல் துறை உதவி பேராசிரியர் பாஸ்கர் பேசுகையில், ""மண் வளத்தினை பாதுகாத்திட விவசாயிகள் இயற்கை உரங்களை பயன்படுத்துவது அவசியம். ரசாயன உரங்களை பயன்படுத்துவதாலும், பூச்சி மருந்துகள் அடிப்பதாலும், பயிர்களின் நோய் எதிர்ப்பு தி குறைகிறது. இயற்கை உரங்கள் மற்றும் இயற்கை பூச்சி கொல்லிகளை பயன்படுத்துவதால் பயிர்களில் நோய் எதிர்ப்பு தி குறையாது. மண் வளம் பாதுகாக்கப்படும். இயற்கை உரங்களை பயன்படுத்தி விவசாயம் செய்தால் தரமான விலை

பொருள்கள் கிடைக்கும்," என்றார்.முகாமில், முசிறி, திருத்தியமலை பகுதிகளைச் சேர்ந்த 150க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் ராஜா, ராஜகோபால், ரெங்கராஜ் ஆகியோர் செய்திருந்தனர்.உதவி வேளாண் அலுவலர் கல்பனா நன்றி கூறினார்.

**நெல் கொள்முதல் புகார் தெரிவிக்க அழைப்புகாரீப் பருவத்தில் 194 பேர் மீது நடவடிக்கை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 27,2011,01:28 IST

தஞ்சாவூர்: கடந்த 2009 - 10ம் காரீப் நெல் கொள்முதல் பருவத்தில் விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் முறைகேடு தொடர்பாக தலைமை அலுவலக கட்டுப்பாட்டு அறைக்கு புகார்கள் வரப்பெற்றது. முறைகேடு செய்த ஊழியர்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது.இதன்படி பட்டியல் எழுத்தர்கள் 56 பேர், உதவியாளர் 28 பேர், காவலர் 12 பேர் மீது ஒழுங்கு நடவடிக்கையும், பட்டியல் எழுத்தர் 14 பேர், உதவியாளர் எட்டுப்பேர், காவலர் ஒருவர் பணி மாற்றமும், பட்டியல் எழுத்தர் 44 பேர், உதவியாளர் 17, காவலர் இருவர் பணியில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.மேலும், துணை மேலாளர் நிலையில் ஒருவர், உதவி மேலாளர் நிலையில் நால்வர், கண்காணிப்பாளர் நிலையில் ஐவர், தர ஆய்வாளர், உதவியாளர் நிலையில் தலா ஒருவர் என மொத்தம் 194 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.நடப்பு கொள்முதல் பருவத்தை கண்காணிக்க தஞ்சை மாவட்டத்துக்கு பொது மேலாளர் (தரக்கட்டுப்பாடு) பிச்சைக்கண்ணு, திருவாரூர் மாவட்டத்துக்கு முதுநிலை மேலாளர் (வர்த்தகம்) பாலகிருஷ்ணன், நாகை மாவட்டத்துக்கு மேலாளர் (கட்டுப்பாட்டு அறை) கிருபாகரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.
தவிர, விவசாயிகளிடம் இருந்து புகார்களை பெற தலைமை அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை வழக்கம் போல செயல்படுகிறது. தலைமை அலுவலக கட்டுப்பாட்டு அறையில் தஞ்சை மாவட்ட விவசாயிகள் 9445190660, திருவாரூர் மாவட்ட விவசாயிகள் 9445190661.நாகை மாவட்ட விவசாயிகள் 9445190662 என்ற எண்களிலும், டெல்டா மாவட்ட போக்குவரத்து ஒப்பந்தகாரர்கள் தஞ்சை மாவட்ட போக்குவரத்து இயக்க ஒப்பந்தகாரர்கள் 9445195840, திருவாரூர் மாவட்ட போக்குவரத்து இயக்க ஒப்பந்தகாரர்கள் 9445195841, நாகை மாவட்ட போக்குவரத்து இயக்க ஒப்பந்தகாரர்கள் 9445195842 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ள வேண்டும்.முதுநிலை மண்டல மேலாளர்களை தஞ்சை 04362 235909, திருவாரூர் 04366 222532, நாகை 04365 251353 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். அலகு அலுவலகங்களான தஞ்சை மண்டலத்தில் தஞ்சை 04362 235321, 9486575956, கும்பகோணம் 0435 2415207, 9791403040, பட்டுக்கோட்டை 04373 235080, 9443727390, திருவாரூர் மண்டலம் திருவாரூர் 04366 224363, 9944855773 ஆகிய எண்களில் புகார் தெரிவிக்கலாம்.

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 26,2011,00:00 IST



**சீனித்துளசி:** ஸ்டீவியா என்று அழைச் சர்க்கரை போன்ற இனிப்புப் பொருளை கரும்புச் சர்க்கரைக்குப் பதிலாக பயன்படுத்தலாம். இலைகளில் அதிக இனிப்புத்தன்மை காணப்படுவதால் சாக்ரின் பொருளுக்கு மாற்றாக இதை பயன்படுத்தலாம். சீனித்துளசியின் இலைகளில் 15-20 சதம் ஸ்டிவியோஸைடு உள்ளது. உலர்ந்த இலைகளில் 3-10 சதம் ஸ்டிவியோஸைடு உள்ளது. இது கரும்புச் சர்க்கரையைவிட 300 மடங்கு அதிக இனிப்புத்தன்மை கொண்டது. மிகக் குறைந்த அளவு கலோரியைக் கொண்டிருப்பதால் இதனை **"கலோரி இல்லாத இயற்கை இனிப்பூட்டி'** என அழைக்கிறார்கள்.
சர்க்கரை நோயால் பாதிக்கப் படுபவர்களுக்கு சீனித்துளசி இனிப்பூட்டி சிறந்ததாக அமையும். தற்சமயம் குளிர்பானம், இனிப்புகள் தயாரிப்பில் இது பயன்படுகிறது. இது 60-70 செ.மீ. உயரம் வரை வளரக்கூடியது. குறைவான பகல்நேரம் தேவை. இது ஒரு மிதவெப்ப மண்டல செடியாகும். இதன் வளர்ச்சிக்கு 30-35 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை அவசியம். பகல் வெப்பநிலை 40 டிகிரி செல்சியசிற்கு குறையாமலும் இரவு நேர வெப்பநிலை 10 டிகிரி செல்சியசிற்கு குறையாமலும் இருக்க வேண்டும். நல்ல வடிகால் வசதியுள்ள இடங்களில் நன்றாக வளரக்கூடியது. மண்ணில் கார அமிலத்தன்மை 6.5 - 7.5க்குள் இருக்க வேண்டும். பொதுவாக தண்டுக்குச்சிகள் மூலம் இனப்பெருக்கம் செய்யப்படுகிறது. இனப்பெருக்கத்திற்காக 15 செ.மீ. நீளம் உள்ள தண்டுக் குச்சிகளைப் பயன்படுத்த வேண்டும். வேர்கள் உருவாவதை அதிகப்படுத்த ஐ.பி.ஏ. என்னும் வளர்ச்சி ஊக்கியைப் பயன்படுத்தலாம். நிலத்தை நன்கு உழுது, ஏக்கருக்கு 10 டன் நன்கு மக்கிய தொழு உரம் இட்டு, மீண்டும் நன்கு உழுதுவிட வேண்டும். செடிகளை மேட்டுப் பாத்திகளிலும் வரப்புப் பகுதிகளிலும் வளர்க்க வேண்டும்.

மேட்டுப்பாத்திகளில் **30 x 40 செ.மீ.** இடைவெளியில் செடிகளை நடவு செய்ய வேண்டும். வரப்புப் பகுதிகளில் நடவு செய்யுபோது **45 x 20 செ.மீ.** இடைவெளி விடவேண்டும். நடவு செய்தபின் உடனடியாக நீர்ப்பாசனம் செய்வது மிகவும் அவசியம். நடவுக்கு பிப்ரவரி-மார்ச் மாதங்கள் சிறந்தவை. செயற்கை உரங்கள் பயன்படுத்துவது கிடையாது. ஒரு ஏக்கருக்கு 24:12:18 கிலோ தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்கள் கொடுக்கக்கூடிய உரங்களைக் கணக்கிட்டு இடுவதன் மூலம் விளைச்சல் அதிகரிப்பதாக ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. பாதியளவு தழைச்சத்து, முழு அளவு மணிச்சத்து, சாம்பல் சத்துக்களை அடியுரமாகவும், மீதமுள்ள தழைச்சத்தை முதல் அறுவடைக்குப் பின்னும் இடவேண்டும்.சீனித்துளசி வறட்சியைத் தாங்காது. மண்ணின் ஈரத்தன்மையைப் பொறுத்து 3 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும். களை எடுப்பது அவசியம். மிக முக்கியமான பின்செய் நேர்த்தி, பூக்களைக் கிள்ளிவிடுதல் நடவு செய்தபின் 30, 45, 60, 70 மற்றும் 80 நாட்களிலும் மற்றும் அறுவடையின்போதும் பூக்களை அகற்றிவிட வேண்டும். போரான் நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறையைப் போக்க போராக்ஸ் 2 சதம் இலைவழி தெளித்துக் கட்டுப்படுத்த வேண்டும்.

நடவு செய்த 4-5 மாதங்களில் பயிர் அறுவடைக்குத் தயாராகிவிடும். அடுத்தடுத்து அறுவடைகள் 3 மாதங்களுக்கு ஒரு முறை செய்யலாம். 3 வருடம் வரை வயலில் வைத்திருக்கலாம்.

அறுவடையின்போது செடியின் அடிப் பாகத்திலிருந்து 10 செ.மீ. உயரம் வரை விட்டு மேல்பகுதியை வெட்டி எடுக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு ஒரு முறை சராசரியாக 1 முதல் 1.2 டன் வரை உலர்ந்த இலைகளை அறுவடை செய்யலாம். (தகவல்: அ.சங்கர், பா.ஆனந்த், ரா.அருள்மொழியான், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஏற்காடு-636 602. 94432 06004)

**கலப்பினக் கெண்டைமீன் வளர்ப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 26,2011,00:00 IST



நன்னீர் கெண்டை மீன் வகைகள் பலவற்றை ஒரே குளத்தில் கலந்து வளர்க்கும் முறை கலப்பின வளர்ப்பாகும். இந்த மீன்கள் ஒரு குறிப்பிட்ட அளவு வளர எட்டிலிருந்து 10 மாதங்கள் வரை நீர் தேவைப்படும். பொதுவாக மீன் வளர்ப்பு குளத்தின் அளவு ஒரு எக்டர் (இரண்டரை ஏக்கர் அல்லது 10,000 ச.மீ) ஆக இருத்தல் நல்லது. இதை ஐந்து குளங்களாக ஒவ்வொன்றும் அரை ஏக்கர் என்ற அளவில் அமைத்துக் கொளள வேண்டும். குளத்தின் வடிவம் செவ்வகமாக இருப்பின் கையாள எளிது. மீன் குள மண்ணானது மணல் 60-80%, வண்டல் 12-25% மற்றும் களிமண் 8-15% ஆகியவற்றைக் கொண்டிருந்தால் நீர் நன்கு தேங்கி நிற்கும். குளக்கரையின் சாய்வை 1:1.5 என்ற விகிதத்தில் அமைக்கலாம். உள் மற்றும் வெளிமடைகளில் தடுப்புவலை பொருத்திய 25 செ.மீ. விட்டம் கொண்ட குழாய்களை பதிக்க வேண்டும்.

மீன்குள நீரின் தன்மைகள்: மீன்குள நீரின் ஆழம் ஒரு மீட்டராக இருப்பது அவசியம். இதனால் மீன்கள் வெப்பத்தாலோ, குளிராலோ பாதிப்படையாது. மீன்குளத்தின் நீர் கீழ்க்கண்ட தன்மைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

வெப்பம்: 25-32 டிகிரி செ. உப்புத்தன்மை: 0-2.5 மி.கி. சோடியம் குளோரைடு/லி. கடினத்தன்மை: 20-300 மி.கி. கால்சியம், மக்னீசியம்/லி. கார அமிலத்தன்மை (பிஎச்): 6.5-9.0 நுண்ணுயிர் இருப்பளவு ஆழம்: 30-60 செ.மீ. உயிர்வளி: 5 மி.கி/லி.

மீன்களுக்கான இயற்கை உணவு பெருக ஓர் எக்டருக்கு ஒரு வளர்ப்பு காலத்திற்கு இயற்கை உரமாக மாட்டுச்சாணம் 10,000 கிலோ இடவேண்டும். ரசாயன உரங்களான யூரியா-200 கிலோ, சூப்பர் பாஸ்பேட்-250 கிலோ, பொட்டாஷ்-40 கிலோ ஆகியவற்றையும் இடலாம். இயற்கை உரத்தையும் ரசாயன உரங்களையும் 10 சம பங்குகளாகப் பிரித்து இரு வாரங்களுக்கொருமுறை மாற்றி மாற்றி இடவேண்டும். முதல் உரப்பங்கை இட்ட 15 நாட்களுக்குப்பின் நீர் பசுமையாக மாறியபின் மீன்குஞ்சுகளை இருப்பு செய்ய வேண்டும்.

மீன் வகைகளும் இருப்பு செய்தலும்: கலப்பின வளர்ப்பிற்கு உகந்த கெண்டை மீன்கள் பல உண்டு. இவை ஒன்றோடொன்று இணங்கி வாழும். வேகமாக வளரும். இந்த கெண்டை மீன் வகைகளும் இருப்பளவும் கீழே குறிப்பிட்டவாறு இருக்க வேண்டும்.

கட்லா-25%, ரோகு-15%, மிர்கால்-20%, வெள்ளிக்கெண்டை-10%, புல்கெண்டை-10%, சாதாக்கெண்டை-20%.

விரலளவு வளர்ந்த மீன்குஞ்சுகளை எக்டருக்கு 10,000 என்ற எண்ணிக்கையில் வெயில் குறைந்த நேரத்தில் இணங்கவைத்து இருப்பு செய்ய வேண்டும். மீன்குஞ்சுகள் மழைக்காலத்திற்குப்பின் அருகிலுள்ள பொரிப்பகங்களில் கிடைக்கும்.

மீன்களுக்கு உணவிடுதல்: மீன்கள் வேகமாக வளர இயற்கை உணவுடன் மேலுணவும் தருதல் அவசியம். மேலுணவாக தவிடு, புண்ணாக்கு ஆகியவற்றை 1:1 என்ற விகிதத்தில் கலந்து தினமும் உடல் எடையில் 5% என்ற அளவுக்கு தரவேண்டும். அரிசி தவிடு, கோதுமை தவிடு, கடலைப் புண்ணாக்கு, எள் புண்ணாக்கு, சூரியகாந்திப் புண்ணாக்கு, சோயா மொச்சை, குச்சிக்கிழங்கு

திப்பி, பட்டுப்பூச்சி கூட்டுப்புழு ஆகியவை மீன்களுக்கு மேலுணவாகப் பயன்படும். தவிடு மற்றும் புண்ணாக்கை நீர் கலந்து உருண்டைகளாக்கி வலைத்தட்டுகளில் இட்டு தரவேண்டும்.
புல்கெண்டைக்கு மென்மையான எல்லாவகைத் தாவரங்களையும் தினம் உடல்எடையில் 7-8 மடங்கு உணவாக தரவேண்டும். மாதம் ஒரு முறை சோதனைப் பிடிப்பு நடத்தி உணவிடும் அளவை நிர்ணயிக்க வேண்டும்.
மீன் அறுவடை: மீன்களைப் பிடிக்க வீச்சுவலை (சோதனைப் பிடிப்பிற்கு) மற்றும் இழுவலை (அறுவடைக்கு) தேவைப்படும். நன்கு மேலாண்மை செய்த ஓர் எக்டர் மீன்குளத்திலிருந்து ஓர் ஆண்டில் உத்தேசமாக 5-7 டன் மீன் அறுவடை கிடைக்கும். இதன்மூலம் மொத்த வருமானமாக குறைந்தபட்சம் ரூபாய் ஒரு லட்சம் பெறலாம். இதில் 50 விழுக்காடு நிகர லாபமாகக் கிட்டும்.
**பா.கணேஷ், எம்.எப்சி.,**உதவி பேராசிரியர்,வெ.பழனிச்சாமி, பிஎச்.டி., இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர்,வேளாண் அறிவியல் நிலையம்,குன்றக்குடி.

**வளமான வாழ்விற்கு வருடம் ஒரு கன்று**

பதிவு செய்த நாள் : ஜனவரி 26,2011,00:00 IST

பால்பண்ணைத் தொழில் இன்று விவசாயிகளுக்கு வருடம் முழுவதும் வருமானம் அளிக்கக்கூடிய சிறந்த தொழிலாக அமைந்திருக்கிறது. பண்ணையிலுள்ள மாடுகளில் மூன்றில் இரண்டு பங்கு மாடுகள் எப்போதும் கறவையிலிருக்குமாறு பராமரித்தால் பால் பண்ணைத் தொழில் அதிக லாபம் அடைய வாய்ப்புண்டு. இதுபோன்ற மேன்மையை அடைய பசுக்கள் 12 அல்லது 13 மாதங்களுக்கு ஒரு முறை கன்று ஈன வேண்டும். அவ்வாறு ஈன்றால் வருடம் ஒரு கன்று நமக்கு கிடைப்பதுடன் நம்முடைய வாழ்வும் வளமாக செழிக்க வாய்ப்புண்டு.
கன்று ஈன்ற பசுக்கள் பராமரிப்பு: பொதுவாக பசுக்கள் கன்று ஈன்றபின் 45 நாட்களுக்குள் முதல் சினைத் தருணத்தை வெளிக்காட்டும். அதன்பின் 21 நாட்களுக்கு ஒரு முறை சினைத் தருணத்தை வெளிப் படுத்தும். மாடுகள் கன்று ஈன்றபின் 60 முதல் 90 நாட்களில் கருத்தரிக்கச் செய்ய வேண்டும். கருவூட்டலுக்குரிய அறிகுறிகள் எதுவும் வெளித்தெரியாவிட்டால் அருகிலுள்ள கால்நடை மருத்துவரை அணுகி முறையான சினை சம்பந்தப்பட்ட பரிசோதனையை செய்துகொள்ள வேண்டும். கருவூட்டலுக்குப் பின் மூன்று மாதம் கழித்து கால்நடை மருத்துவரிடம் மறுபடியும் நம்முடைய பசுவினை காண்பித்து சினைப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.
சினைமாடுகள் பராமரிப்பு: பசுக்களில் சினைக்காலம் சுமார் 285 நாட்கள் அதாவது 9 மாதம் 2 வாரம் 1 நாள். எருமைகளின் சினைக்காலம் சற்று அதிகம். அதாவது சுமார் 310 நாட்கள். சினைப்பருவத்தில் போதுமான அளவு கலப்புத் தீவனம், பசும்புல் மற்றும் தாது உப்பு முறையான அளவில் கொடுக்க வேண்டும். சினைப்பட்ட 7ம் மாதம் கழித்து முதல் கன்று வளர்ச்சிக்கென நாள்

ஒன்றிற்கு 3.0 கிலோ கலப்பு தீவனம் கொடுக்கப்பட வேண்டும்.
சினைப்பட்ட 7ம் மாதம் முதல் பால் கறப்பதையும் படிப்படியாகக் குறைத்து மடியை வற்றச் செய்ய வேண்டும். கன்று ஈனுவதற்கு 3 நாட்கள் முன்னும், பின்னும் கலப்புத் தீவனத்தைக் குறைத்து, மலம் கட்டாதவாறு இளகிய தீவனமாகக் கொடுக்க வேண்டும். கன்று ஈன்று 8 மணி நேரத்திற்குள் நஞ்சுக்கொடி தானாக வெளியில் வந்துவிடும். கன்று ஈனுதல், நஞ்சுக்கொடி விழுதல் போன்றவற்றில் ஏதேனும் சிரமங்கள் இருந்தால் உடன டியாக கால்நடை மருத்துவரின் உதவியை நாடவேண்டும். எவ்வளவு சீக்கிரம் மருத்துவரை அணுகி சிகிச்சை முறையை மேற்கொள் கிறோமோ அந்த அளவிற்கு நம்முடைய பசுவினை இறப்பிலிருந்து காப்பாற்றலாம்.
பருவத்திற்கு வருதல்: பொதுவாக கலப்பினக் கிடேரிகள் 15 முதல் 18 மாத அளவில் பருவத்திற்கு வந்துவிடும். நாட்டு இனங்கள் 24 முதல் 30 மாத வயதில் பருவத்திற்கு வரும். பருவத்திற்கு வரும் கிடேரியின் எடை சுமார் 150 கிலோ இருக்க வேண்டும். மாடுகள் 21 நாட்களுக்கு ஒரு முறை பருவத்திற்கு வரும். சினைப்பருவ காலம் சுமார் 12 முதல் 18 மணி நேரம் வரை காணப்படும். காலையில் சினைப்பருவ அறிகுறிகள் தோன்றினால், அன்று மாலையிலும், மாலையில் அறிகுறிகள் தோன்றினால் மறுநாள் காலையிலும் கருவூட்டல் செய்ய வேண்டும்.
கருவூட்டல் செய்த பின் சினைத்தருண அறிகுறிகள் மறுபடியும் தோன்றுகின்றதா என்பதைக் கவனமாக கண்காணித்து வரவேண்டும். அடுத்த 21 நாட்களில் சினைத் தருண அறிகுறிகள் தோன்றினால், கால்நடை மருத்துவரிடம் காண்பித்து, பிரச்னைக்கு தீர்வுகாண வேண்டும். அல்லது மீண்டும் கருவூட்டல் செய்துகொள்ள வேண்டும். சினைத்தருண அறிகுறிகள் தோன்றவில்லை எனில் சுமார் 3 மாதம் கழித்து கால்நடை மருத்துவரிடம் காண்பித்து சினைப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். ரா.தங்கதுரை, எம்.வி.எஸ்சி., பிஎச்.டி.,வெ.பழனிச்சாமி, எம்.வி.எஸ்சி., பிஎச்.டி.,வீ.தவசியப்பன், எம்.வி.எஸ்சி.,வேளாண் அறிவியல் நிலையம்,குன்றக்குடி-630 206. 04577-264 288.

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 26,2011,00:00 IST

காராம்பசு என்பது ஒரு தனி இனமல்ல. நாட்டு இன மாடுகளுக்கு பிறக்கும் கன்று குட்டிகளில் நாக்கு முதல் மடி காம்பு வரை முழுவதும் கருப்பாக உள்ள பசுக்கள் "காராம்பசுக்கள்' என்று அழைக்கப் படுகின்றன. இவைகள் ஈனும் கன்றுகள் கூட சமயங்களில் காராம்பசுவாக இருப்பதுண்டு. இப்படி அரிதாகப்பிறக்கும் பசுக்களின் பாலில் மருத்துவ குணம் இருப்பதாக நம்பப்படுகிறது. இதன் பால் கெட்டியாகவும், இதிலிருந்து தயாரிக்கப்படும் நெய் வாசனையுடனும் இருக்கும். அக்காலங்களில் புகழ்பெற்ற கோயில்களில் காராம்பசுவின் பாலில்தான் அபிஷேகம் செய்திருக்கிறார்கள். இன்றும்கூட காராம்பசுவின் பாலை வழிபாட்டிற்கு பயன்படுத்துவது வழக்கத்தில் உள்ளது.

இன்றைய நிலையில் தமிழகத்தில் ஐந்திற்கு மேல் காராம்பசுக்கள் இருப்பது அரிதே. அதனால்தான் இந்த பசுமாடு ஒன்றின் விலை 3 லட்சம் முதல் 10 லட்சம் ரூபாய் வரை இருக்கிறது. தாராபுரம் பகுதியில் சில விவசாயிகள் காராம்பசுவை வளர்த்துவருகிறார்கள். தொடர்புக்கு: சேவா. விவேகானந்தன், 0452-238 0082.
**(தகவல்: பசுமை விகடன், 25.1.11)**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**நெல் கொள்முதல் மையங்களில் இடைத்தரகர்கள் கலெக்டர் எச்சரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 26,2011,23:34 IST

உசிலம்பட்டி:கருமாத்தூரில் அரசு நெல்கொள்முதல் மைய துவக்கவிழா கலெக்டர் காமராஜ் தலைமையில் நடந்தது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர் பிரகாஷ்பாபு, உசிலம்பட்டி ஆர்.டி.ஒ., சங்கர், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை அதிகாரிகள், ஊராட்சித் தலைவர்கள் கருமாத்தூர் ஜெயராமன், கோவிலாங்குளம் ஜெயராஜ், கொடிக்குளம் பாலாமணி மற்றும் பலர் கலந்து கொண்டனர். கொள்முதல் மையத்தை துவக்கி வைத்து கலெக்டர் பேசியதாவது: மதுரை மாவட்டத்தில் இந்த ஆண்டு பருவமழை ஒத்துழைப்பின் காரணமாக 55 ஆயிரம் எக்டேரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. விவசாயிகள் ஊடுபயிர் சாகுபடி செய்தல், மாற்றுப்பயிர் விவசாயம் என நவீன வேளாண் உத்திகளை கையாள வேண்டும்.

மதுரை மாவட்டத்தில் இந்த ஆண்டு 32 அரசு நெல்கொள்முதல் மையங்கள் துவக்கப்பட உள்ளன. அறுவடை நடக்கும் பகுதிகளில் இதுவரை 16 மையங்கள் துவக்கப்பட்டுள்ளன. அறுவடை துவங்கியவுடன் மற்ற பகுதிகளிலும் கொள்முதல் மையங்கள் துவக்கப்படும். தேவைக்கேற்ப இந்த கொள்முதல் மையங்களை அதிகரிக்க அரசு தயாராகஉள்ளது. இந்த மையங்களில் விவசாயிகள் நேரிடையாக பயன்பெற வேண்டும். இடைத்தரகர்களை இந்த கொள்முதல் மையங்களில் நுழையவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். மையங்களுக்கு டெலிபோன் இணைப்பு வழங்கவும் ஏற்பாடுகள் நடக்கிறது என்றார்.

**விதை பரிசோதனை மையம் துவக்கம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 26,2011,00:14 IST

மதுரை : தேனி அனுக்கிரகா நகரில், விதைப் பரிசோதனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தனியார் விதை விற்பனை நிலையங்கள், விவசாயிகள், அரசு விதை விற்பனை நிலையங்கள், விதை பண்ணை விவசாயிகள் தங்களிடம் உள்ள விதை மாதிரிகளை எடுத்து வந்து, விதை

முளைப்பு திறன் குறித்து அறிந்து கொள்ளலாம், என மதுரை விதை ஆய்வு துணை இயக்குனர் ராதா கிருஷ்ணன் தெரிவித்து உள்ளார்.

**விவசாயிகளுக்கு அடையாள அட்டை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 26,2011,00:52 IST

ஒட்டன்சத்திரம் : ஒட்டன்சத்திரத்தில் சிறுதானிய விதை கிராம திட்ட பயிற்சி, திட்ட விழிப்புணர்வு,விவசாயிகளுக்கு திட்ட செயல்பாட்டிற்கு அடையாள அட்டை வழங்கும் விழா பெரியகுளிப்பட்டியில் நடந்தது. மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் (மாநில திட்டம்) தெய்வேந்திரன் தலைமை வகித்தார். ஊராட்சி தலைவர் பாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். திட்ட விழிப்புணர்வு, விதைகிராமத் திட்டம் குறித்து ஒட்டன்சத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் முத்துராமலிங்கம் மற்றும் திண்டுக்கல் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக வேளாண்மை அலுவலர் (மத்தியத்திட்டம்) ரவிச்சந்திரன் விளக்கினர். தொடர்ந்து விவசாயிகளுக்கான அடையாள அட்டை வழங்கப்பட்டது.

**ஒட்டன்சத்திரம் நெய் சிறப்புக்கு காரணம் என்ன: புது தகவல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 26,2011,00:47 IST

திண்டுக்கல் : ஒட்டன்சத்திரம் நெய் தனிச்சிறப்பு பெற காரணம் குறித்து பயிற்சி முகாமில் கூறப்பட்டது. திண்டுக்கல்லில் மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், கால்நடை பல்கலை., இணைந்து கிராம சுயஉதவிக்களுக்கு கறவை மாடுகள் வளர்ப்புகுறித்து ஒரு வார பயிற்சி அளிக்கப்படுகிறது. திண்டுக்கல், சாணார்பட்டி, ஆத்தூர், ரெட்டியார்சத்திரம், வத்தலக்குண்டு ஒன்றியங்களை சேர்ந்தவர்களுக்கு பயிற்சி தரப்படுகிறது. துவக்க விழாவிற்கு திட்ட அலுவலர் பிரேமா தலைமை வகித்தார். கால்நடை பல்கலை., இணை இயக்குனர் பீர் முகமது, கால்நடை பராமரிப்புதுறை உதவி இயக்குனர் இன்பசேகரன், நபார்டு உதவி பொதுமேலாளர் ரமேஷ், முன்னோடி வங்கி மேலாளர் அர்ஜுன், டாக்டர்கள் கண்ணன், விஜயராஜன், உமாராணி உட்பட பலர் பேசினர். பீர்முகமது பேசுகையில்,"இன்னும் 3 ஆண்டுகளில் கோமியம் விலை கொடுத்து வாங்கப்படும் என நபார்டு கூறியுள்ளது. எனவே தொழில்நுட்பத்துடன் மாடுகளை வளருங்கள்,'என்றார். டாக்டர் கண்ணன் பேசுகையில்,"ஒட்டன்சத்திரம் நெய் நாடு முழுவதும் வரவேற்பை பெற்றது. எருமை மாட்டு பாலில் இருந்து இந்த நெய் தயாரிப்பதே இதற்கு காரணம். எனவே சுயஉதவி குழுக்கள் அதிக எருமை மாட்டை வளர்க்க முன்வர வேண்டும்,'என்றார்.

**பெரியாறு அணை அருகே புதிய அணைபுலிகள் சரணாலய அதிகாரிகள் ஆய்வு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 26,2011,22:34 IST

கூடலூர்:பெரியாறு அணை அருகே புதிய அணை கட்ட தேர்வு செய்யப்பட்ட வனப்பகுதியை தேசிய புலிகள் சரணாலய உயரதிகாரிகள் பார்வையிட்டனர்.
பெரியாறு அணையில் இருந்து 300 மீட்டர் தூரத்தில் புதிய அணை கட்டப் போவதாக கேரள அரசு அறிவித்தது. சர்வே, மண் பரிசோதனை, பாறையின் தன்மை குறித்து பல மாதங்களாக ஆய்வு செய்யப்பட்டது. இப்பணிகள் முடிவடைந்தாலும், தேர்வு செய்யப்பட்ட இடம் அடர்ந்த வனப்பகுதியாக இருப்பதால் சிக்கல் ஏற்பட்டது. அப்பகுதி புலிகள் சரணாலயமாக உள்ளதால் புதிய அணை கட்டுவது சாத்தியமில்லை. புதிய அணை கட்டுவதில் சிக்கல் இருந்த போதிலும், அணை கட்டியே தீருவோம் என கேரள அரசு அறிவித்து பிரச்னையை பெரிதாக்கியது.
இந்நிலையில், தேசிய புலிகள் சரணாலய முதன்மை செயலர் ராஜேஷ்கோபால், இயக்குனர் சுக்லா, இணை இயக்குனர்கள் சஞ்சயன்குமார், சுரேஷ் ஆகியோர், புதிய அணை கட்ட தேர்வு செய்யப்பட்ட வனப்பகுதியை நேற்று பார்வையிட்டனர். வனவிலங்குகள் நடமாட்டம், மரங்களின் எண்ணிக்கை குறித்து தகவல் சேகரித்தனர்.

**தரமற்ற விதைகள் விற்பனை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 26,2011,00:20 IST

தேனி : மாவட்டத்தில் தனியார் விதை விற்பனையாளர்கள் தரமற்ற நெல், கம்பு, சோளம், மக்காச்சோளம், பருத்தி, கடலை, எள், காய்கறி விதைகள் விற்பனை செய்கின்றனர். இவற்றை வாங்கி சாகுபடி செய்த விவசாயிகளுக்கு பெரிய அளவில் இழப்பு ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகள், விதைச்சான்றுத்துறையிடம் புகார் செய்துள்ளனர். விதைச்சான்றுத்துறையினர் போலி விதை விற்பனையாளர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

**பால் விலையை உயர்த்த உற்பத்தியாளர் சங்கம் முடிவு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 26,2011,00:19 IST

கம்பம் : பிப்ரவரி 1 முதல் பால்விலையை உயர்த்த கம்பம் உத்தமபுரம் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் முடிவு செய்துள்ளது. சங்கத்தின் ஆலோசனை கூட்டம் தலைவர் அஜ்மல்கான் தலைமையில் நடந்தது. செயலாளர் சுகுமாரன் முன்னிலை வகித்தார். துணை செயலாளர் வேங்கையன் வரவேற்றார். மாடுகளுக்கு வழங்கப்படும் தீவன பொருட்கள் விலை உயர்வு

காரணமாக, பால் விலையை உயர்த்துவது தவிர்க்க முடியாதது என கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. தலைவர் அஜ்மல்கான் கூறியதாவது: இதுவரை லிட்டர் ஒன்று 17 ரூபாய்க்கு கொள்முதல் செய்து, 20 ரூபாய்க்கு விற்று வந்தனர். இனி லிட்டர் ஒன்றுக்கு 20 ரூபாய்க்கு கொள்முதல் செய்து, 24 ரூபாய்க்கு விற்க வியாபாரிகள் முன்வர வேண்டும். பால் உற்பத்தியாளர்களின் இந்த முடிவிற்கு வியாபாரிகளும், ஓட்டல்காரர்களும் ஒத்துழைக்க வேண்டும், என்றார்

**விவசாயிகள் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 26,2011,00:19 IST

தேனி : இரண்டு மாதங்களுக்கு முன் பெய்த மழையால், நெல், வாழை, கரும்பு, வெற்றிலை, முருங்கை உட்பட பல பயிர்கள் சேதமடைந்தன. ஆனால் மாவட்டத்தின் எந்தப்பகுதியிலும் அதிகாரிகள் குழு முழுமையான வெள்ளச்சேத கணக்கெடுப்பு பணியில் ஈடுபடவில்லை. இதனால் விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் கிடைப்பதில் பிரச்னை ஏற்பட்டுள்ளது. ஆண்டிபட்டி பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் விவசாய நிலங்களில் மணல் தேங்கி சேதம் ஏற்பட்டுள்ளது. இந்த மண், மணலை அகற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இப்பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கரில், மீண்டும் சாகுபடி செய்வதில் பிரச்னை உள்ளது.

**வீழ்ச்சிநெல் அறுவடை தீவிரத்தால் விலைவருத்தத்தில் விவசாயிகள் தவிப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 26,2011,21:28 IST

வத்திராயிருப்பு:மாவட்டம் முழுவதும் பருவகால சாகுபடிக்கான நெல் அறுவடை பணிகள் தீவிரமடைந்துள்ளதால் சீசன் களைகட்டியுள்ளது. அனைத்து இடங்களிலும் ஒரே நேரத்தில் அறுவடை நடைபெறுவதால் நெல் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் விவசாயிகள் வருத்தத்தில் உள்ளனர்.மாவட்டத்தில் ராஜபாளையம், சேத்தூர், தேவதானம், ஸ்ரீவி., வத்திராயிருப்பு உள்ளிட்ட மேற்குப் பகுதிகளில் 30 ஆயிரம் ஏக்கர்களுக்கும் மேல் நெல் விவசாயம் நடந்துவருகிறது. வழக்கமாக டிசம்பர் மாதத்திற்குள்ளாகவே பருவகால அறுவடை பணிகள் முடிந்துவிடும். ஆனால் இம்முறை பருவமழை தாமதத்தால் ஒருமாதத்திற்கு மேல் தாமதமாகவே நடவுப்பணிகள் துவங்கின. எனவே அறுவடை பணிகளும் தாமதமாயின.அசுரவேகம்: அறுவடை நேரத்தில் மழை பெய்ததால் வயல்கள் ஈரமடைந்து சதுப்பு நிலமாக இருந்தது. இதனால் அறுவடை இயந்திரங்கள் வயல்களுக்குள் செல்ல முடியவில்லை. இது அறுவடை பணிகளை மேலும் தாமதமாக்கியது. இந்நிலையில் பொங்கல் பண்டிகை வந்துவிட்டதால் அதன்பிறகே விவசாயிகள் அறுவடையை துவக்கினர். கண்மாய்களில் நீர் வற்றுவதற்குள் அடுத்த கோடைகால நடவுப்பணிகளை முடித்துவிட வேண்டும் என்பதால் விவசாயிகள் அசுரவேகத்தில் அறுவடை

பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.விலை வீழ்ச்சி: அனைத்து இடங்களிலும் ஒரே நேரத்தில் அறுவடை நடப்பதால் வியாபாரிகளுக்கும், அரவை ஆலைகளுக்கும் அதிக நெல்வரத்து உள்ளது. இதனால் நெல் விலை கடும் வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த பருவகால அறுவடையில் 72 கிலோ எடை கொண்ட ஒரு மூடை டீலக்ஸ் பொன்னி நெல் 1,140 ரூபாய் வரை விலை போனது. ஆனால் தற்போது 815 ரூபாய் மட்டுமே கிடைக்கிறது. ஒரு மூடைக்கு 325 ரூபாய் விலை வீழ்ச்சியடைந்துள்ளதால் விவசாயிகள் வருத்தத்தில் உள்ளனர். மூடைகளை இருப்பு வைக்க வழியில்லாததால் கிடைத்த விலைக்கு களத்திலேயே "கைமாற்றி' வருகின்றனர். தற்போதைய நிலவரப்படி பால் ஒட்டு ரகம் ஒரு மூடை 900 ரூபாய்க்கும், கல்சர் பொன்னி 750 ரூபாய்க்கும் விலை போகிறது.

**பூக்கள் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 26,2011,00:33 IST

விருதுநகர் : விருதுநகர் மார்க்கெட்டில் மல்லிகை, பிச்சிப்பூ கி@லா ரூ. 500க்கு விற்கப்படுகிறது. விருதுநகரில் கிலோ பட்டர் பீன்ஸ், அவரைக்காய், தக்காளி, மாங்காய் தலா 50 ரூபாய், கருனை கிழங்கு, முட்டை கோஸ், வெண்டைக்காய், உருளைகிழங்கு, முள்ளங்கி, சவ்சவ், பீட்ரூட் தலா 24 , பாகற்காய், அதலைக்காய், சிறிய வெங்காயம் தலா 60, கத்தரிகாய், @கரட், நூக்கல், எலுமிச்சை பழம், டர்னிப், இஞ்சி தலா 40, மொச்சைக்காய் 36, புடலங்காய் 28 ரூபாய். பச்சை மிளகாய் 32, கறி@வப்பிலை 60, சேம்பு கிழங்கு, சேனை தலா 36, சுரைக்காய் 14, மல்லி தழை 30, பெல்லாரி 65, பட்டர் பீன்ஸ் 120, பச்சை பட்டாணி 160, முருங்கைக்காய் 180 ரூபாய்க்கு விற்கப்படுகின்றன. பூக்கள்: கிலோ பிச்சிப்பூ, மல்லிகை, கனகாம்பரம் 500, செவ்வந்தி 100, மெட்ராஸ் மல்லி 300, கேந்தி பூ 10 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

**உரதொழிற்சாலை, துறைமுகம் வரபோகிறது**

பதிவு செய்த நாள் : ஜனவரி 26,2011,22:14 IST

திருவாடானை சட்டசபை தொகுதியை தொடர்ந்து காங்., கோட்டையாக தக்க வைத்து, ஐந்தாவது முறையாக வெற்றியும் பெற்றவர் ராமசாமிஎம்.எல்.ஏ., . இவரது தந்தை கரியமாணிக்கம் நான்கு முறை எம்.எல்.ஏ.,வாக இருந்தவர். தொடர்ந்து வெற்றி பெறுவதால் புதிதாக எந்த வாக்குறுதியும் தரவில்லை. பொதுமக்களும் தங்கள் தேவைகள் பூர்த்தி ஆனதாக நினைத்தார்களோ என்னவோ, வாக்குறுதிகளை எதிர்பார்க்காமல் இவரையே ஐந்து முறை தேர்ந்தெடுத்துள்ளனர். மறு சீரமைப்பில் தொகுதி பெயர் அப்படியே இருந்தாலும், இதன் ஒரு பகுதி சிவகங்கை மாவட்டம்

காரைக்குடி தொகுதியில் சேர்க்கப்பட்டு, இளையான்குடிதொகுதியிலிருந்த ஆர்.எஸ்.மங்கலம் ஒன்றியம் மற்றும் ராமநாதபுரம் தொகுதியின் ஒரு பகுதி இதன் தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

திருவாடானையில் போலீஸ்ஸ்டேஷன், தொண்டியில் குடியிருப்புடன் கூடிய போலீஸ் ஸ்டேஷன், திருவாடானை ஆஸ்பத்திரிக்கு கட்டடம், தொண்டி ஆரம்பசுகாதார நிலையத்தை ஆஸ்பத்திரியாக தரம் உயர்த்தியது, தொண்டியில் பஸ் டெப்போ போன்ற தேவைகளை பூர்த்தி செய்துள்ளார். எம்.எல்.ஏ.,நிதியை கொண்டு ரோடு, குடிநீர், நூலகம், ஊராட்சி, பள்ளி கட்டடங்களுக்கு செலவழித்துள்ளார். மக்கள் சக்தியால் தொடர்ந்து வெற்றியை குவித்து வரும் இவரது செயல்பாடுகள் குறித்து மாற்றுக்கட்சியினர் கருத்துகள்:
மதிவாணன்(அ.தி.மு.க., ஒன்றிய செயலாளர்):
சுதந்திர போராட்ட தியாகிகள் அதிகம் கொண்ட தொகுதியாக இருந்தும் அவர்களுக்கு நினைவு சின்னம் இல்லை. பஸ் வசதி முழுமை பெறவில்லை. கல்லூரி இல்லாமல் வெளியூர் செல்ல வேண்டியுள்ளது. நிதியை பரவலாக செலவழிக்காததால் பல ஊராட்சிகள் வளர்ச்சியடையவில்லை. சட்டசபையில் தொகுதி வளர்ச்சி குறித்த பேச்சுகள் இல்லை.
குருசாமி (இந்திய கம்யூ., தாலுகா செயலாளர்):
விவசாயத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகள் இல்லை. திருவாடானையில் உள்ள தனியார் நூற்பாலையை இயக்க வழிசெய்யவில்லை.

மருத்துவமனையில் கட்டட வசதி இருந்தும் சிகிச்சை வசதி இல்லை. டாக்டர்களை நியமிக்க முயற்சியும் மேற்கொள்ளவில்லை.
ராமசாமி எம்.எல்.ஏ.,: கடந்த தேர்தலில் நான் எந்த வாக்குறுதியும் தரவில்லை. மத்திய அமைச்சர்கள் உதவியுடன் பல்வேறு வசதிகள் செய்து தந்துள்ளேன். என் முயற்சியால் தொண்டியில் உர தொழிற்சாலை, 100 கோடி ரூபாய் செலவில் துறைமுகமும் போன்றவை அமைய போகிறது. காவிரி குடிநீர் திட்டத்தில் திருவாடானை ஒன்றியம் ஒதுக்கப்பட்ட போது, முதல்வரிடம் பேசி இப்பகுதியை திட்டத்தில் சேர்த்தேன், என்றார்.
சொன்னதும், செய்ததும்""கடந்த தேர்தலில் நான் எந்த வாக்குறுதியும் தரவில்லை," என,ராமசாமி எம்.எல்.ஏ.,வே "ஓப்பன் ஸ்டேட்மென்ட்' விட்ட பின், அவர் சொன்னதை தேடி அலையும் வேலை மிஞ்சியது. "தொகுதிக்கு எல்லாமே செய்துவிட்டதால் தான், வாக்குறுதிக்கு வேலையில்லை,' என, அவர் நினைத்திருந்தால், கட்டாயம் அந்த என்னத்தை திருத்த வேண்டியதுதான். மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் விவசாயத்தில் விழும் பெருத்த அடியில், திருவடானை தொகுதி முன்னிலை வகிக்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் கையில் கருகி நெற்பயிருடன் நிவாரணம் கேட்டு வருவதும் இத்தொகுதியில் தான். அடிக்கடி பயிர்கள் நோய் தாக்குதலுக்கு ஆளாகியும், இதற்காக எம்.எல்.ஏ., தரப்பின் நடவடிக்கை என்ன என்பது அவருக்கே வெளிச்சம். கடந்த ஐந்து முறையாக கட்டடங்களுக்கு செலவு செய்த தனது நிதியை, கல்விக்கு செலவிட்டிருந்தால் இங்குள்ள மாணவர்கள் உயர்கல்வி தேடி சிவகங்கை மாவட்டத்தில் குடிபெயர்வதை தவிர்த்திருக்கலாம். -நமது சிறப்பு நிருபர்-

**சரியான விதையால் ஏக்கருக்கு 30 மூட்டை நெல் மகசூல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 26,2011,01:21 IST

திருத்துறைப்பூண்டி: ""சரியான விதையை தேர்வு செய்து, பாதுகாத்து வைத்து சாகுபடி செய்தால் ஒரு ஏக்கருக்கு பாரம்பரிய நெல்லில் குறைந்த செலவில் 30 மூட்டை வரை மகசூல் பெற முடியும்," என கர்நாடக மாநில சகஜசம்ருதா அமைப்பு ஒருங்கிணைப்பாளர் வெங்கடேசன் தெரிவித்தார். திருத்துறைப்பூண்டி அருகே ஆதிரெங்கம் இயற்கை விவசாய பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், கிரியேட் நிறுவனம் சார்பில் விதைத்தேர்வு குறித்த வயல்வெளிப்பயிற்சி மற்றும் கருத்தரங்கம் நடந்தது. கர்நாடக மாநில கிராம சுயராஜ் அமைப்பு ஒருங்கிணைப்பாளர் நாகராஜ் தலைமை வகித்தார். நமது நெல்லை காப்போம் மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன் முன்னிலை வகித்தார்.

கர்நாடக மாநில சகஜசம்ருதா அமைப்பு ஒருங்கிணைப்பாளர் வெங்கடேசன் பேசியதாவது: பாரம்பரிய நெல் சாகுபடியில் அதிகபட்ச மகசூலாக ஏக்கருக்கு 18 மூட்டை மட்டுமே நம் முன்னோர்கள் எடுத்துள்ளனர். அப்போது, விவசாயிகளுக்கு விதைத்தேர்வும் தெரியாது. விதை நேர்த்தியும் அறிந்திருக்கவில்லை. இயற்கை விவசாய தொழில் நுட்பங்களான பஞ்சகவ்யா, அமிர்தகரைசல், மூலிகை பூச்சி விரட்டியும் அப்போது இல்லை அதனால் மகசூல் குறைவாக இருந்தது. அறுவடை செய்வது எல்லாம் விதை நெல் அல்ல. களத்து மேட்டில் கிடக்கும் கருக்காய் கூட முளைக்கும். நாற்று வளரும். பயிர் வளர்ந்து கதிர் வரும். ஆனால், ஒரு சில நெல் மணிகள் மட்டுமே இருக்கும்.

விதைக்கு என வயல்களை தேர்வு செய்யும் முறை விவசாயிகளால் கண்டறியப்பட்டுள்ளது. வயல்களில் இறங்கி, அதிகமாக கதிர் வந்துள்ள தூரில், அதிகமாக நெல் மணிகள் உள்ள பயிரை அடையாளம் செய்து, நன்று பயிர் முற்றியதும் அதை எடுத்து கையில் கசக்கி, சுத்தம் செய்து 240 கிராம் நெல்லை பாதுகாப்பு வைத்துக் கொண்டோம் என்றால் ராஜராஜன் ஆயிரம் திட்டம் (ஒற்றை நாற்று முறை) மூலம் ஒரு ஏக்கருக்கு போதுமானதாகும். இவ்வாறு விதை தேர்வு செய்து

பாதுகாத்து வைத்து சாகுபடி செய்தால், ஒரு ஏக்கருக்கு பாரம்பரிய நெல்லில் குறைந்த செலவில் 30 மூட்டை வரை மகசூல் எடுக்க முடியும். இவ்வாறு அவர் பேசினார். விதை தேர்வு தொழில் நுட்பங்களை வயல்வெளி பயிற்சி வாயிலாக அவர் தெரிவித்தார்.

பின், நடந்த கருத்தரங்கை ஆதிரெங்கம் பஞ்சாயத்து தலைவர் முருகதாஸ் துவக்கி வைத்தார். வேவ்ஸ் பவுண்டேஷன் வரதராஜன், கட்டிமேடு நுகர்வோர் செயலாளர் தியாகராஜன், உம்பளச்சேரி கால்நடை வளர்ப்போர் சங்க செயலாளர் ஜானகிராமன், ஒற்றுமை அறக்கட்டளை நிறுவனர் சுப்பையன், தமிழக இயற்கை விவசாய நாகை மாவட்ட அமைப்பாளர் சதாசிவம் ஆகியோர் பங்கேற்றனர். பாலம் தொண்டு நிறுவன நிறுவனர் செந்தில்குமார் நன்றி கூறினார். ஏற்பாடுகளை கிரியேட், ஜி.டி., பவுண்டேஷன், வேவ்ஸ் பவுண்டேஷன், ஜேசீஸ் சங்கம், பாலம் தொண்டு நிறுவனம், ஒற்றுமை அறக்கட்டளை ஆகிய அமைப்புகள் செய்திருந்தன.

**விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 26,2011,23:04 IST

திருவள்ளூர் : விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், நாளை திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் அலுவலக வளா கத்தில் நடைபெறுகிறது.திருவள்ளூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாதந்தோறும் நடந்து வருகிறது. அதன்படி, இம்மாதத்திற்கான கூட்டம் நாளை காலை 10.30 மணிக்கு கலெக்டர் அலுவலக வளாகத்தில் நடைபெறும்.கூட்டத்திற்கு, மாவட்ட கலெக்டர் ராஜேஷ் தலைமை வகிக்கிறார்.

**இயற்கை முறையில் தக்காளி சாகுபடி: எக்டேருக்கு 25 டன் வரை மகசூல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 26,2011,23:01 IST

என்.ஆனந்தன்/திருவள்ளூர் : செயற்கை உரங்களை பயன்படுத்தி தக்காளி சாகுபடி செய்வதை விட, இயற்கை வழி வேளாண் முறையில் சாகுபடி செய்து அதிக மகசூல் பெற்று லாபம் பெறலாம் என, திரூர் நெல் ஆராய்ச்சி நிலையத் தலைவர் ராமசுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.அவர் கூறியதாவது: தக்காளி சாகுபடியை கோடைக் காலம், மழைக் காலம் தவிர்த்து இடைப்பட்ட காலத்தில் பயிர் செய்வது அதிக லாபத்தை தரும். பூச்சிகளின் தாக்குதல் மற்றும் நோய் பாதிப்பில் இருந்து செடிகளை இந்த பருவத்தில் எளிதாக காக்க முடியும்.நாற்றங்கால் முறை:மண்ணைத் தோண்டி அடித்தாள்களை அகற்ற வேண்டும். வடிகால் நன்றாக அமைய உயரமான பாத்திகள் அமைக்கவும். தொழு உரம் அல்லது கம்போஸ்ட், செம்மண், மணல் ஆகியவற்றை சம அளவில்

கலந்து நிலத்தில் இட வேண்டும். நாற்று அழுகல் நோயை கட்டுப்படுத்த கோதுமைத் தவிடு, மட்கிய மண் ஆகியவற்றை சம அளவில் கலந்து இட வேண்டும்.விதை அளவு:நாட்டு ரக விதைகள் ஒரு எக்டேருக்கு 40 கிராமும், வீரிய ஒட்டு ரக விதையாக இருந்தால் 150 கிராமும் இட வேண்டும். ரசாயனப் பொருட்களை கொண்டு நேர்த்தி செய்யப்பட்ட விதைகளை தவிர்க்க வேண்டும். விதைப்பதற்கு முன், 400 கிராம் விதையுடன் 40 கிராம் அசோஸ்பைரில்லத்தை கலக்க வேண்டும். நாற்றங்கால் பாத்தியில் 10 செ.மீ., இடைவெளி விட்டு வரிசையாக விதைக்க வேண்டும்.நடவு வயல்:சரியான ஈரப்பதத்தில் வயலை 3 அல்லது 4 முறை உழவு செய்ய வேண்டும். தொடர்ந்து 10 நாட்கள் சிதைவு ஏற்படுவதற்காக விட வேண்டும். வேப்பெண்ணெய் 3 சதவீதம், வேப்ப விதை பருப்புச் சாறு 5 சதவீதம் என்ற அளவில் வயலில் தெளித்து பூச்சி பரவுதலை தடுக்க வேண்டும்.அறுவடை:முக்கால் பருவ முதிர்ச்சியில் பழங்களை அறுவடை செய்ய வேண்டும். அதிகளவு பழுக்க விடக்கூடாது. மேற்கண்ட இயற்கை வேளாண் முறைகளின்படி தக்காளி சாகுபடி செய்தால் எக்டேருக்கு 20 முதல் 25 டன் வரை மகசூல் செய்ய முடியும்.இவ்வாறு ராமசுப்பிரமணியன் தெரிவித்தார்.

**நடமாடும் கால்நடை மருத்துவ ஆய்வு வாகனம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 26,2011,01:11 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடமாடும் கால்நடை மருத்துவ ஆய்வு வாகனம் துவக்கப்பட்டுள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பு, விவசாயம் சார்ந்த தொழில் பிரதான தொழிலாக அமைந்துள்ளது. கிராமங்களில் கால்நடை வளர்ப்பவர்கள் தங்கள் கால்நடைகளை நோய் தாக்குதலில் இருந்து பாதுகாக்கவும், மருத்துவ வசதி மற்றும் ஆலோசனைகள் வழங்கும் பல்நோக்கு திட்டத்தின் படி நடமாடும் மருத்துவ ஆய்வு வாகன வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வாகனங்கள் கிராமப் பகுதியில் உள்ள விவசாயிகளின் வீடுகளுக்கு சென்று கால்நடைகளின் பால், சாணம், தோல் ஆகியவற்றை மாதிரி பொருளாக எடுத்து நோய் தாக்குதல் காரணிகளை ஆய்வு செய்து உடனுக்குடன் மருத்துவ வசதி ஏற்படுத்தப்படவுள்ளது. இதனால், கால்நடை மருத்துவமனைக்கு நீண்ட தூரம் செல்லும் அலைச்சல் மற்றும் திடீர் நோய் தாக்குதலால் இறக்கும் கால்நடை இழப்புகளை கட்டுப்படுத்த முடியும். விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பில் நவீன முறைகள் மற்றும் பால் உற்பத்தி அதிகரிக்கும் முறைகள், கோழி வளர்ப்பு ஆகியவை குறித்து ஆலோசனைகள் வழங்கும் வகையில் நடமாடும் மருத்துவ வாகனம் துவக்கப்பட்டுள்ளதாக கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குனர் ஞானஉபகாரம் தெரிவித்துள்ளார்.

**தேங்காய் பருப்புக்கு செஸ் வரி நீக்க உற்பத்தியாளர் சங்கம் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 26,2011,23:34 IST

காங்கயம்: "தேங்காய் பருப்புக்கு விதிக்கப்பட்ட ஒரு சதவீத செஸ் வரியை நீக்க வேண்டும்,' என, தேங்காய் உற்பத்தியாளர் சங்க கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.காங்கயம் தேங்காய் பருப்பு உற்பத்தியாளர் சங்க பொதுக்குழு கூட்டம், காங்கயம் - சென்னிமலை ரோட்டில் உள்ள என்.எஸ்.என்., திருமண மண்டபத்தில் நடந்தது. செயற்குழு உறுப்பினர் கந்தசாமி வரவேற்றார். தலைவர் நடராஜ் தலைமை வகித்தார். செயலாளர் பாலசுப்ரமணியம், பொருளாளர் தெய்வசிகாமணி முன்னிலை வகித்தனர்.கூட்டத்தில், "காங்கயம் பகுதியில் தேங்காய் எண்ணெய் தயாரிப்பு தொழில் பெரியளவில் நடக்கிறது. இத்தொழிலில் 25 ஆயிரம் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். தொழிலாளர் பற்றாக்குறை இருந்து கொண்டே உள்ளது.போதிய எண்ணிக்கையில் தொழிலாளர்கள் இல்லாத நிலை காணப்படுகிறது. தேங்காய் பருப்புக்கு தமிழக அரசு ஒரு சதவீத செஸ் வரியை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்,' என்பன உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**விளக்கெண்ணெய், பருப்பு விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 26,2011,23:35 IST

திருப்பூர்: திருப்பூர் மார்க்கெட்டில் விளக் கெண்ணெய் மற்றும் பருப்பு விலை உயர்ந்துள்ளது.மார்க்கெட் நிலவரம்:திருப்பூர் ஆயில் வியாபாரிகள் சங்க தலைவர் சந்திரன் கூறுகையில், ""கடலை எண்ணெய் மற்றும் ரீபென்ட் ஆயில் கிலோவுக்கு இரண்டு ரூபாய், தேங்காய் எண்ணெய் ஐந்து ரூபாய் குறைந்துள்ளது; விளக்கெண்ணெய் 10 ரூபாய் உயர்ந்துள்ளது. ஒரு கிலோ பாமாயில் 65; சூரியகாந்தி எண்ணெய் 86; நல்லெண்ணெய் 90; ரீபென்ட் ஆயில் 96; விளக்கெண்ணெய் 120; தேங்காய் எண்ணெய் 95; கடலை எண்ணெய் 88; நெய் 280 ரூபாய்க்கு விற்கிறது," என்றார்.

பருப்பு விலை உயர்வு: திருப்பூர் மார்க்கெட் வியாபாரிகள் சங்க தலைவர் பாலசுப்ரமணியம் கூறுகையில், ""வரமிளகாய் கிலோவுக்கு ஐந்து ரூபாய், பாசிப்பருப்பு இரண்டு, துவரம் பருப்பு ஒன்பது, கருப்பு உளுந்து ஐந்து, உருட்டு உளுந்து மற்றும் தட்டைப்பயறு மூன்று ரூபாய் என உயர்ந்துள்ளது. ஒரு கிலோ புளி 80 ரூபாய்; வரமிளகாய் 95 முதல் 100; அஸ்கா 31; பச்சைப்பயறு 55; பாசிப்பருப்பு 68; துவரம்பருப்பு 62; கருப்பு உளுந்து 64; உருட்டு உளுந்து 70; தட்டை பயறு 42; கொள்ளு 22 ரூபாய்க்கு விற்பனையாகிறது," என்றார்.வாழை இலை விலையும் கூடியது: பூ மார்க்கெட் வியாபாரிகள் சங்க செயலாளர் ரத்தினசாமி கூறுகையில்,""ஒரு கட்டு வாழை இலை 50 ரூபாய் வரை உயர்ந்து, 350 ரூபாய்க்கு விற்கிறது. சாப்பாட்டு இலைக்கு 25 காசு வரை

அதிகரித்திருக்கிறது. சாப்பாட்டு இலை 1.50 ரூபாய்; டிபன் இலை 1; தலைவாழை இலை 2.50 ரூபாய். பனிகாலம் முடியும் வரை, விலை உயர்வு நீடிக்கும். இலை வெட்டும் ஆட்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால், முடக்கம் ஏற்பட்டு விலை உயர்ந்துள்ளது. பனியால் 25 சதவீதம் விளைச்சல் பாதித்துள்ளது," என்றார்.

**நெகமத்தில் கொப்பரை ஏலம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 26,2011,23:10 IST

நெகமம்:நெகமத்தில் நடந்த கொப்பரை ஏலத்தில் ஒரு கிலோவுக்கு அதிகபட்சமாக 61.50 ரூபாய் விலை கிடைத்தது.
நெகமம் சுற்றுப்பகுதி விவசாயிகள் 5 பேர், ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்திற்கு 12 மூட்டை கொப்பரையை கொண்டு வந்தனர். மொத்தம் நான்கு வியாபாரிகள் கொப்பரையை தரம் பிரித்து ஏலம் கூறினர். ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சண்முகம் ஏலம் நடத்தினார்.முதல் தர கொப்பரை 6 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 59.25 ரூபாய் முதல், அதிகபட்சம் 61.50 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 6 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 40 ரூபாய் முதல், அதிகபட்சம் 57.10 ரூபாய் வரை விலை கிடைத்தது.அதிகாரிகள் கூறுகையில், "பொங்கல் பண்டிகைக்கு பின் கொப்பரை மார்க்கெட் சூடு பிடிக்கவில்லை. கொப்பரை உற்பத்தி இல்லாததால் வர்த்தகம் ஸ்தம்பித்துள்ளது. கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது, முதல் தர கொப்பரை கிலோவுக்கு 1.50 ரூபாயும், இரண்டாம் தர கொப்பரை கிலோவுக்கு 3.35 ரூபாயும் விலை உயர்ந்துள்ளது' என்றனர்.

**ஒரு கிலோ தக்காளி ரூ.23**

பதிவு செய்த நாள் : ஜனவரி 25,2011,23:13 IST

திருப்பூர் : உள்ளூர் வரத்து அதிகமானதால், கூடைக்கு 50 ரூபாய் தக்காளி விலை குறைந்துள்ளது; ஐந்து கிலோ கூடை 100 ரூபாய்க்கு விற்பனையாகிறது; சில்லறைக்கு 23 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.வடக்கு உழவர் சந்தை அலுவலர் ராமலிங்கம் கூறியதாவது:உழவர் சந்தையில் ஒரு கிலோ கத்தரி 16 ரூபாய்; பெரிய வெங்காயம் 40; சின்ன வெங்காயம் 60; பாகல் 14; பீர்க்கன் 18; பச்சை மிளகாய் சம்பா 20, உருண்டை 25; புடலை 16; கேரட் மற்றும் பீன்ஸ் 40; உருளை 24; கோஸ் 24; சுரைக்காய், அரசாணி, பூசணி 10; தேங்காய் 18; கருணைக்கிழங்கு 26; சேனை 20; வாழைக்காய் 18; வாழைப்பூ 5; கீரை வகை 15; கொத்தமல்லி 20; கறிவேப்பிலை 30; மேரக்காய்

20; கொய்யா 20; பீட்ரூட் 22; முள்ளங்கி 20 ரூபாய்க்கு விற்பனையாகிறது. உள்ளூர் வரத்து அதிகமானதால், தக்காளி விலை கூடைக்கு 50 ரூபாய் குறைந்துள்ளது. ஐந்து கிலோ கொண்ட கூடை 100 ரூபாய்க்கு விற்கிறது; சில்லறையில் ஒரு கிலோ 23 ரூபாய்க்கு விற்கிறது, என்றார்

**நிலக்கடலை வரத்து குறைவு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 25,2011,23:12 IST

அவிநாசி : சேவூர் ஒழுங்கு முறை விற்பனை கூடத் தில் நடந்த இந்த வார நிலக்கடலை ஏலத் துக்கு, 708 மூட்டை வரத்தாக இருந்தது; இது, கடந்த வாரத்தை காட்டிலும் 4,000 மூட்டை குறைவு.இந்த வாரம் காய்ந்த நிலக்கடலை விலை (குவிண்டாலுக்கு) வருமாறு:முதல் ரகம் ரூ.3,350 முதல் ரூ.3,500 வரை, இரண்டாம் ரகம் ரூ.3,000 முதல் ரூ.3,300 வரை மற் றும் மூன்றாம் ரகம் ரூ.2,650 முதல் ரூ.2,900 வரை.ஒழுங்குமுறை விற் பனை கூட கண் காணிப்பாளர் கூறுகையில், ""கடந்த வாரம் பொங்கல் பண்டிகை என்பதால், வரத்து நன்றாக இருந் தது. தற்போது, நிலக் கடலை சீசன் முடிந்து விட்டதால், விவசாயி கள் இருப்பு வைத்துள்ள காய்களை மட்டும் ஏலத் துக்கு கொண்டு வருகின் றனர். இந்த வாரம் ஏழு லட்சம் ரூபாய்க்கு வர்த் தகம் நடந்தது,'' என்றார்.

**விதை வெங்காயம் தட்டுப்பாடு: விவசாயிகள் ஏமாற்றம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 25,2011,23:23 IST

பொங்கலூர் : பொங்கலூர் பகுதியில் உள்ள வெங்காய குடோன்களில், சின்ன வெங்காயம் இருப்பு இல்லை; விதை வெங்காயம் கிடைக்காமல், விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.அவினாசிபாளையம், கருணைபாளையம், சம்பந்தம்பாளையம் உள்ளிட்ட இடங்களில் வெங்காய குடோன்கள் அதிகளவில் உள்ளன. இப்பகுதியில் விளையும் சின்ன வெங்காயத்தை வியாபாரிகள் வாங்கி இருப்பு வைத்து, உணவு தேவைக்காகவும், விதைக்காகவும் விற்பனை செய்வர்.இங்கிருந்து ஒட்டன்சத்திரம், கோவை உட்பட பல்வேறு இடங்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. தற்போது உள்ளூரில் விளைச்சல் இல்லாததாலும், இருப்பு வெங்காயம் அனைத்தும் விற்றுத் தீர்ந்து விட்டதாலும், வெங்காய குடோன்கள் வெறிச்சோடி காணப்படுகின்றன.தற்போது சின்ன வெங்காயத்துக்கு நல்ல விலை கிடைப்பதாலும், போதுமான நீர்வளம் இருப்பதாலும், பொங்கலூர் வட்டார விவசாயிகள் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யும் பரப்பை அதிகரித்துள்ளனர். விதை வெங்காயத்தை விவசாயிகள் போட்டி போட்டுக்கொண்டு கொள்முதல் செய்வதால், கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.வியாபாரிகளால் விவசாயிகளின் தேவையை பூர்த்தி செய்ய முடியவில்லை. பணம் கொடுத்தாலும் விதை வெங்காயம் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. இரண்டாம் தர விதை வெங்காயம் கிலோ 42 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் விதை வெங்காயம் விற்கப்படுகிறது.

## கொல்லத்தில் சம்பவம் தேங்காய் எடுப்பதற்காக குளத்தில் இறங்கிய 2 தொழிலாளிகள் பலி

*கொல்லம், ஜன.27–*

*மீன் வளர்ப்பதற்காக தோண்டடப்பட்ட குளத்தில், தென்னை மரத்தில் இருந்து விழுந்த தேங்காயை எடுப்ப தற்காக இறங்கிய 2 கட்டி டத் தொழிலாளிகள் சகதிக்குள் மூழ்கி பரிதாப மாக உயிர் இழந்தனர்.*

*ஆழம் தெரியாமல் காலை விடக்கூடாது என்பதற்கு சான்றாக நடைபெற்ற சம்பவம் குறித்து விவரம் வருமாறு:–*

*நண்பர்கள்கொல்லம் மங்காடு என்ற இடத்தை சேர்ந்த கட்டிடத் தொழிலாளர்கள் சுனில்லால் (வயது 36) மற்றும் வினோத் (36) இருவரும் நண்பர்கள்.சம்பவம் நடந்த நேற்று முன்தினம் மாலையில் இவர்கள் இருவரும், அருகில் மீன் வளர்ப் பதற்காக தோண்டப்பட்டு இருந்த பெரிய குளத்தில், தென்னை மரத்தில் இருந்து விழுந்து கிடந்த தேங்காயை எடுப் பதற்காக இறங்கி உள்ளனர். ஆனால் அந்த குளத்தில் தண்ணீருடன் அதிக அளவில் சேறு–சகதி நிறைந்து கிடந்த தால், குளத்தில் இறங்கிய வாலிபர்களால் குளத்தில் இருந்து வெளியே வர முடிய வில்லை.அதன் காரணமாக அவர்கள் எழுப்பிய அலறல் சத்தம் கேட்டு அங்கு வந்தவர்கள், இதுகுறித்து உடனடியாக தீயணைப்பு படை வீரர்களுக்கு தகவல் கொடுத்தனர்.பரிதாப சாவுபின்னர் பொதுமக்களுடன் தீயணைப்பு வீரர்களும் போராடி குளத்தில் மூழ்கிய 2 வாலிபர்களையும் மீட்டு அருகில் உள்ள ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். ஆனால் சிகிச்சை பலனளிக்காமல் அவர்கள் இருவரும் உயிரிழந்தனர். இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின் றனர்.பலியான சுனில் லாலுக்கு சந்தியா என்ற மனைவியும், காந்தலால் என்ற மகனும் உள்ளனர். வினோத்தின் மனைவி பெயர் நிர்மலா.*

## நடப்பு நிதி ஆண்டின் முதல் 9 மாதங்களில் நாட்டின் நறுமண பொருள்கள் ஏற்றுமதி 16 சதவீதம் வளர்ச்சி



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
கொச்சி
நடப்பு நிதி ஆண்டின் முதல் 9 மாதங்களில் (ஏப்ரல்–டிசம்பர்) மிளகாய், மஞ்சள், இஞ்சி உள்ளிட்ட நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 16 சதவீதம் (ரூ.4,222.56 கோடி) அதிகரித்து ரூ.4,880.56 கோடியாக உயர்ந்துள்ளது. அளவின் அடிப்படையில் இது, 3 சதவீதம் மட்டுமே அதிகரித்து 3.79 லட்சம் டன்னிலிருந்து 3.92 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.
டாலர் மதிப்பு
கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தில் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி டாலர் மதிப்பு அடிப்படையில் 21 சதவீதம் அதிகரித்து 88.23 கோடி டாலரிலிருந்து 107 கோடி டாலராக உயர்ந்துள்ளது. அளவின் அடிப்படையில் ஏற்றுமதி 3 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், டாலர் மதிப்பு அடிப்படையில் ஏற்பட்டுள்ள அமோக வளர்ச்சி, இந்திய நறுமணப் பொருள்களுக்கு வெளிநாடுகளில் நல்ல விலை கிடைத்துள்ளதை எடுத்துக் காட்டுகிறது.
சென்ற நிதி ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ஒரு டாலரின் வெளிமதிப்பு சராசரியாக ரூ.47.8 ஆக இருந்தது. இது, நடப்பு நிதி ஆண்டின் இதே மாதங்களில் ரூ.45.60–ஆக குறைந்துள்ளது. டாலர் மதிப்பு குறைந்துள்ளதால் ஏற்றுமதியில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களுக்கு பாதிப்பு ஏற்படும். இதனை வெளிப்படுத்துகின்ற வகையில் டாலர் மதிப்பு அடிப்படையில் ஏற்றுமதி 21 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், ரூபாய் மதிப்பு அடிப்படையில் 16 சதவீதம் மட்டுமே அதிகரித்துள்ளது.
இலக்கு
நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டில் ரூ.5,100 கோடி மதிப்பிற்கு 4.65 லட்சம் டன் நறுமண பொருள்கள் ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஒன்பது மாதங்களில் ஏற்றுமதி இலக்கில் அளவின் அடிப்படையில் 84 சதவீதமும் ரூபாய் மதிப்பு அடிப்படையில் 96 சதவீதமும், டாலர் மதிப்பு அடிப்படையில் 95 சதவீதமும் எட்டப்பட்டுள்ளது. எனவே இந்த நிதி ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கைக் காட்டிலும் ஏற்றுமதி அதிகரிக்கும். சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில் ரூ.5,560.50 கோடி (117.38 கோடி டாலர்) மதிப்பிற்கு 5.03 லட்சம் டன் நறுமண பொருள்கள் ஏற்றுமதியாகி உள்ளன.
மிளகாய்
முதல் 9 மாதங்களில் மிளகாய் ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 22 சதவீதம் அதிகரித்து 1.47 லட்சம் டன்னிலிருந்து 1.80 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. ரூபாய் மதிப்பு அடிப்படையில் 17 சதவீதம் அதிகரித்து ரூ.946.49 கோடியிலிருந்து ரூ.1,108.92 கோடியாக உயர்ந்துள்ளது. மொத்த நறுமண பொருள்கள் ஏற்றுமதியில் மிளகாயின் பங்களிப்பு 23 சதவீதமாக உள்ளது.
மஞ்சள்
ஒன்பது மாதங்களில் மஞ்சள் ஏற்றுமதி அளவின் அடிப்படையில் சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 13 சதவீதம் சரிவடைந்துள்ளது. இதற்கு உள்நாட்டில் மஞ்சளுக்கு நல்ல விலை கிடைத்ததே காரணமாகும். சர்வதேச அளவில் மஞ்சள் உற்பத்தி குறைந்து, விலை மிகவும் உயர்ந்துள்ளது. இதனையடுத்து மதிப்பின்

அடிப்படையில் இதன் ஏற்றுமதி 77 சதவீதம் உயர்ந்துள்ளது.
இஞ்சி
கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தில் இஞ்சி ஏற்றுமதி 4,150 டன்னிலிருந்து 7,800 டன்னாக உயர்ந்துள்ளது. ரூபாய் மதிப்பு அடிப்படையில் ரூ.32.44 கோடியிலிருந்து ரூ.49.04 கோடியாக அதிகரித்துள்ளது.
நறுமண எண்ணெய் மற்றும் ஓலியோரெசின்ஸ் ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 5,200 டன்னிலிருந்து 5,275 டன்னாகவும், ரூபாய் மதிப்பு அடிப்படையில் ரூ.546.77 கோடியிலிருந்து ரூ.641.40 கோடியாகவும் வளர்ச்சி கண்டுள்ளது.
அதேசமயம் மிளகு ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 15,425 டன்னிலிருந்து 14,000 டன்னாக குறைந்துள்ளது. எனினும் ரூபாய் மதிப்பு அடிப்படையில் 9.4 சதவீதம் அதிகரித்து ரூ.243.27 கோடியிலிருந்து ரூ.266.25 கோடியாக உயர்ந்துள்ளது. மிளகிற்கு அதிக விலை கிடைத்ததே இதற்கு காரணமாகும். சென்ற நிதி ஆண்டில் ஒரு கிலோ மிளகிற்கு ரூ.157.71 கிடைத்தது. இது, நடப்பு நிதி ஆண்டில் ரூ.190.18–ஆக உயர்ந்துள்ளது. நடப்பு நிதி ஆண்டில் நறுமண பொருள்கள் ஏற்றுமதி வாயிலாக 112.50 கோடி டாலர் அன்னியச் செலாவணி வருவாய் ஈட்ட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது, நாட்டின் மொத்த ஏற்றுமதி இலக்கில் 0.5 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜனவரி 1–ந் தேதி நிலவரப்படி இந்தியாவில் அரிசி, கோதுமை கையிருப்பு 4.70 கோடி டன்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
ஜனவரி 1–ந் தேதி நிலவரப்படி நம் நாட்டில் அரிசி, கோதுமை கையிருப்பு 4.70 கோடி டன்னாக உயர்ந்துள்ளது.
விதிமுறைகள்
கையிருப்பு விதிமுறைகளின்படி இம்மாதத்தில் 2.50 கோடி டன் இருந்தாலே போதுமானது. சென்ற ஆண்டு ஜூலை மாதத்திலேயே உணவு தானியங்கள் கையிருப்பு 3.20 கோடி டன்னை எட்டி விட்டது என்பது குறிப்பிடத்தக்கது. உணவு தானியங்கள் வீணாவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், உற்பத்தி அதிகரித்து வருவதாலும் கையிருப்பு கணிசமாக அதிகரித்துள்ளதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 2006 மற்றும் 2007 ஆண்டுகளில் நாட்டின் கோதுமை உற்பத்தி மிகவும் குறைந்து போயிருந்தது. எனவே அதிக அளவில் இறக்குமதி செய்ய வேண்டிய தேவை உருவானது. நடப்பு 2010–11 வேளாண் பருவத்தில் (ஜூலை–ஜூன்) கோதுமை உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே கோதுமையை அதிக அளவில் ஏற்றுமதி செய்ய முடியும்.

சர்வதேச அளவில் இந்தியா பருப்பு வகைகள் உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது. அதுபோல் பருப்பு பயன்பாட்டிலும் முன்னிலையில் இருந்து வருகிறது. மக்கள்தொகையில் பெரும்பாலானோருக்கு புரதச் சத்து குறைவாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. எனவே அதிக புரதம் கொண்ட பொருள்கள் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை மத்திய அரசு ஊக்குவித்து வருகிறது. கடந்த 2009–ஆம் ஆண்டில் பருப்பு வகைகள் உற்பத்தி சரிவடைந்ததால், அதிக விலை கொடுத்து அதிக அளவில் இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தற்போது இந்தியா தனது மொத்த பருப்பு வகைகள் தேவையில் 20 சதவீதத்தை இறக்குமதி செய்து வருகிறது. சென்ற நிதி ஆண்டில் 1.80 கோடி டன் பருப்புக்கு தேவை இருந்த நிலையில் 35 லட்சம் டன் இறக்குமதி செய்யப்பட்டது.

சமையல் எண்ணெய்

நம் நாட்டில் சமையல் எண்ணெய் பயன்பாடு ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. எனினும் தேவைப்பாட்டை ஈடு செய்யும் வகையில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி இல்லை. இந்தியாவின் மொத்த சமையல் எண்ணெய் தேவையில் 60 சதவீதம் இறக்குமதி செய்யப்படுகிறது. உள்நாட்டிலேயே சமையல் எண்ணெய் வகைகளை அதிக அளவில் உற்பத்தி செய்ய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. என்றாலும் எதிர்காலத்திலும் இந்த விஷயத்தில் இறக்குமதியையே அதிகம் சார்ந்திருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

## கடந்த நான்கு மாதங்களில் இயற்கை ரப்பர் விலை 40 சதவீதம் அதிகரிப்பு

எஸ்.சனந்தகுமார்,கொச்சி

கடந்த நான்கு மாதங்களில் நம்நாட்டில் இயற்கை ரப்பர் விலை 40 சதவீதம் அதிகரித்துள்ளது. சென்ற ஆண்டு அக்டோபர் 1–ந் தேதி அன்று ஒரு கிலோ இயற்கை ரப்பர் விலை ரூ.169–ஆக இருந்தது. இது, இம்மாதம் 24–ந் தேதி அன்று ரூ.235–ஆக உயர்ந்துள்ளது.உற்பத்தி உச்சகட்டமாக இருக்கும் காலத்தில் ரப்பர் விலையில் ஏற்பட்ட உயர்வு, டயர் தயாரிப்பு நிறுவனங்களுக்கு கவலை ஏற்படுத்தி உள்ளது. இனிவரும் மாதங்களில் உற்பத்தி குறைவாக இருக்கும் என்பதால், விலை மேலும் உயர வாய்ப்புள்ளது.இயற்கை ரப்பர் அதிகம் உற்பத்தியாகும் கேரள மாநிலத்தில் பருவம் தவறி பெய்த மழையால் சென்ற ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதத்தில் உற்பத்தி, முந்தைய ஆண்டின் இதே மாதங்களைக் காட்டிலும் குறைந்துள்ளது. இருப்பினும் நடப்பு நிதி ஆண்டில் உற்பத்தி, சென்ற நிதி ஆண்டைக் காட்டிலும் சற்று அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேசமயம் உற்பத்தியைக் காட்டிலும் தேவைப்பாடு அதிகரித்து வருகிறது.உலக அளவில் ரப்பர் உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் தாய்லாந்து, இந்தோனேஷியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளிலும் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து சர்வதேச சந்தைகளிலும் இதன் விலை சென்ற 4 மாதங்களில் 65 சதவீதம் அதிகரித்து ரூ.266.61 (ஒரு கிலோ)–ஆக உயர்ந்துள்ளது.

மாலை மலர்
BETA

**காய்கறி விலை வீழ்ச்சி; வெங்காயம் கிலோ ரூ.20க்கு விற்பனை**

புதன்கிழமை, ஜனவரி 26, 12:18 PM IST சென்னை, ஜன. 26-



கடந்த மாதம் இந்தியா முழுவதும் வெங்காயம் விலை கிடு கிடு வென உயர்ந்து கிலோ ரூ.100க்கு விற்றது. இதனால் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்ட னர். வெங்காயம் விலை பெரிய பிரச்சினையாக உருவெடுத்தது. இதைத் தொடர்ந்து மத்திய அரசு வெங்காய ஏற்று மதிக்கு தடை விதித்தது.

பாகிஸ்தானில் இருந்து வெங்காயம் இறக்குமதி செய்யவும் நடவடிக்கை எடுத்தது. இதனால் வெங்காயம் விலை குறையத் தொடங்கியது. சென்னையிலும் ரூ.100க்கு விற்ற வெங்காயம் படிப் படியாக குறைந்தது. கடந்த சில நாட்களாக கிலோ ரூ.40க்கு விற்ற வெங்காயம் இன்று மேலும் குறைந்தது.

கோயம்பேடு மார்க்கெட்டில் பெரிய வெங்காயம் கிலோ ரூ.20 முதல் ரூ.25 வரை விற்றது. சில்லரை விற்பனை கடைகளில் கிலோ ரூ.30 முதல் ரூ.40 வரை விற்கப்படுகிறது. சில்லரை கடைகளில் 2-வது ரகம் வெங்காயம் கிலோ ரூ.20க்கு விற்பனையாகிறது. வெங்காயம் ஏற்றுமதி செய்யப்படாததாலும், உள் நாட்டில் விளைச்சல் அதிகரித்து இருப்பதாகவும் வெங்காயம் விலை குறைந்து வருகிறது.

அடுத்த சில நாட்களில் வெங்காயம் விலை மேலும் வீழ்ச்சி அடையும் என்று மொத்த வியாபாரிகள் தெரிவித்தனர். சென்னையில் தக்காளி விலையும் குறைந்துள்ளது. சில்லரை கடைகளில் கிலோ ரூ.20 முதல் 24க்கு விற்கப்படுகிறது. இதே போல் மற்ற காய்கறிகள் விலையும் குறைந்துள்ளது.

கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகள் விலை (கிலோவுக்கு) நிலவரம் வருமாறு:-

பெரிய வெங்காயம் ரூ. 20-25

உருளைக்கிழங்கு ரூ. 15

பீன்ஸ் ரூ. 20

பீட்ரூட் ரூ. 13

நூக்கல் ரூ. 12

சவ்சவ் ரூ. 6-8

காலி பிளவர் ரூ. 12

பட்டாணி ரூ. 25

முள்ளங்கி ரூ. 25

டபுள் பீன்ஸ் ரூ. 30

அவரைக்காய் ரூ. 15

கத்தரிக்காய் ரூ. 6-10

பாகற்காய் ரூ. 15

புடலங்காய் ரூ. 13

தக்காளி ரூ. 20-22

சேனைக்கிழங்கு ரூ. 20

மிளகாய் ரூ. 13

சேப்பங்கிழங்கு ரூ. 18

காராமணி ரூ. 16

சாம்பார் வெங்காயம் ரூ. 40

முருங்கைக்காய் ரூ. 120

சுரைக்காய் ரூ. 10

பூசணிக்காய் ரூ. 10

பரங்கிக்காய் ரூ. 13

சென்னையில் சில்லரை விற்பனை கடைகளில் காய் கறிகள் கிலோவுக்கு ரூ.5 முதல் ரூ.10 வரை அதிகம் வைத்து விற்கப்படுகிறது.